Registered No. M. 878.

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.

தொகுதி 5.	1914௵ ஜூன்௴ 15௳ ஆநந்த௵ ஆனி௴ 2௳	பகுதி 2

அ. ரங்கஸ்வாமி ஐயர், B. A., B. L., F. T. S., பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ. 2 தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.
(CONTENTS.)

பக்கம்.

1. தற்காலநிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர் 41
From the Front—A. Rangaswami Iyer

2. பூலோக புவர்லோக சம்பந்தம்—B. S R. சுப்பிரமணியன் 49.
Relation of the Dead to Earth—B. S. R. Subramanian

3. பிரஹ்மக்ஞான தர்சனம் (பாலபாடம்)—வி. வெங்குஸ்வாமி ஐயர்
Elements of Theosophy—V. Venguswamy Iyer 55

4. ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்—அ. ரங்கஸ்வாமி ஐயர் 57
Rishis or Masters—A. Rangaswamy Iyer

5. கல்வி கற்பித்தல் ஒரு கைங்கர்யம் — ஆத்தங்குடி M. ஸ்வாமிநாதையர். 63
Education as Service—Attangudy M. Swaminathier

6. ஒரு புதிய கொள்கை—B. S. R. சுப்பிரமணியன் 69
New Attitude—B. S. R. Subramanian

7. என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது? — ஆத்தங்குடி எம். சுவாமிநாதையர் 74
Why not I—Attangudy M. Swaminathier

8. புத்தக வரவு—B. S. R. சுப்பிரமணியன் 78
Review of Books—B. S. R. Subramanian

9. சமாசாரம்—வி. விசுவநாதையர். 78
News—V. Visvanathier.

காலஞ்சென்ற ப. நாராயணஐயரவர்கள் பிரசுரித்திருக்கும் தமிழ்ப் புத்தகங்கள்.

1. பதஞ்சலியோக சூத்திரம் — ரூ 1-0-0
2. மாதாஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள் — 0-12-0
3. இயேசுகிறிஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்க முறைநூல் — 1-0-0
4. மனிதன் வமிசாவளியின் உண்மை — 0-8-0

மேற்கண்ட புஸ்தகங்கள் வேண்டுவோர் மதுரை பிரஹ்மக்ஞான ஸபைப் பிரெஸிடெண்டு அவர்களுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

ॐ

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 5. } 1914௵ ஜூன்மீ 15வ ஆநந்த௵ ஆனிமீ 2வ { பகுதி 2

தற்கால நிலைமை.

பிரஹ்மக்ஞான சபை அக்கிராசனாதிபதியாகிய மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் சென்ற மேமீ 1வ இங்கிலாந்து போய்ச்சேர்ந்தனர். அவர்களை லண்டன்மாநகரத்தில் சேரிங்கிராஸ் (Charing Cross) ஸ்டேஷனில் 300 மெம்பர்கள் எதிர்கொண்டு அவர்களுக்கு நல்வரவு கூறி உபசரித்தார்கள்.

* * *

மறுநாள் சாயங்காலம் செல்ஸி டவுன் ஹாலில் (Chelsea Town Hall) நமது அக்கிராஸனாதிபதியவர்களுக்கு உபசரிப்புப் பத்திரிகை வாசிப்பதற்காக ஒரு மீட்டிங்கு கூடிற்று. அதற்கு நமது சபையின் உப அக்கிராஸனாதிபதியாகிய ஏ. பி. ஸின்னட் என்பவர் அக்கிராஸனம் வகித்துப் பேசினர். அதற்குப்பிறகு கிளைச்சங்கங்களிலிருந்து பெரும்பாலும் பிரதிநிதிகளாய் வந்த மெம்பர்களாகிய மனிதர்கள், ஸ்திரிகள், குழந்தைகள் ஒவ்வொருவரும் புஷ்பங்களை

எடுத்துக்கொண்டு பிரசங்க மேடையின்மேல் வரிசையாய் வந்து அவைகளைக் கொடுத்து நமது சபை அக்கிராஸனாதிபதியவர்களை உபசரித்தார்கள். சீக்கிரத்தில் அம்மேடை முழுவதும் புஷ்பங்களால் நிரப்பப்பட்டு தோட்டம்போல் விளங்கிற்று. இங்கிலாந்து தேசத்து ஜெனரல் ஸிக்ரிடேரியாகிய Mrs. ஷார்ப் என்பவர் சீக்காயிருந்தமையால் அவருடைய ஸ்தானத்தில் வேலை பார்க்கிற Mrs பெட்ஸ் என்பவர் உபசரிப்புப்பத்திரத்தை வாசித்தார்கள். அதற்கு மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் மறுமொழியாக ஒரு சிறு பிரசங்கம் செய்தார்கள்.

*
* *

மேமீ 4உயில் பிரிவிகவுன்ஸிலில் சென்னை ஐக்கோர்ட்டுத் தீர்மானத்தின்மேல் மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையார் செய்திருந்த அப்பீலானது ஈரங்கிக்கு வந்தது. அந்த ஈரங்கியின் முடிவு சென்றமீ தற்காலநிலைமையில் பொதுவாகக் கூறப்பட்டது. ஆனால் அந்த ஈரங்கியில் நடந்த விவரங்களை நமது நண்பர்கள் அறிய விரும்புவோர்களாகையால் அவைகளைக் குறித்து சிறிது இங்கு சொல்லல் தகும். அன்று பிரிவிகவுன்ஸிலில் நியாயாதிபதிகளாகிய லார்டு சான்ஸலர் (Lord Haldane என்ற Lord Chancellor) லார்டு பிலச்சர் மூல்டன் (Lord Fletcher Moulton) முந்தி அல்லஹாபாத் ஹைகோர்ட்டில் பிரதமஜட்ஜியாயிருந்த ஸர் ஜான்எட்ஜ் (Sir John Edge) லார்டு பார்க்கர் (Lord Parker) முந்தி கல்கத்தா ஐக்கோர்ட்டில் ஜட்ஜாயிருந்த அமீர் ஆலி (Mr Amir Ali) என்பவரும் ஆக இவர்கள் அந்த அப்பீலை விசாரணை செய்தார்கள். மிஸ்டர் யங்கர் கே. ஸி. (Mr Younger K. C) என்பவரும், ஸர் ஏர்ல் ரிச்சார்ட்ஸ் கே. ஸி. (Sir Erle Richards K. C.) என்பவரும் நமது அக்கிராஸனாதிபதியவர்களுக்கு வக்கீல்களாகவும் முன் சென்னப்பட்டணத்தில் பாரிஸ்டராகவிருந்து இப்போது இங்கிலாந்து தேசத்தில் வேலைபார்க்கும் மிஸ்டர் கென்வொர்த்தி பிரௌன் கே. ஸி. (Mr Kenworthy Brown K. C., என்பவர் Mr. ஜி. நாராயணய்யாவுக்கு வக்கீலாகவும் பேசினார்கள்.

*
* *

சென்னை ஐகோர்ட்டில் பிரதம அப்பீல் சாங்கியில் பிரதான ஜட்ஜ் அவர்களும் ஜட்ஜ் ஒல்டுபீல்டு அவர்களும் ஒன்றுக்கொன்று ஒத்திராத காரணங்களைக்கொண்டு முடிவில் ஒரே அபிப்பிராயத்திற்கு வந்தனர்களென்றும், மைனர்களுடைய நன்மையைச் சென்னை ஐக்கோர்ட்டில் கருதாமல் அவர்களை ஒருஇடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டுபோகத்தக்க சாமான் மூட்டைகளைப்போல பாவிக்கப்பட்டார்களென்றும் அவர்களுடைய விருப்பங்கள் யாதென விசாரிக்கப்படவில்லையென்றும் அப்பீல் வாதியவர்களின் வக்கீல் எடுத்துக் கூறினர். பிரிவிகவுன்ஸில் ஜட்ஜ் லார்டு பார்கர் அவர்கள் ஒரு மைனரை அவர் ஆஜரில்லாமலிருக்கும்போது ஒரு குற்றத்திற்காக கீழ்க்கோர்ட்டார் விசாரணை செய்திருக்கிறார்போலும் என்று தாபந்தமாய்ச் சொன்னர். ஜட்ஜ் லார்ட் பிலச்சர் மூல்டன் என்பவர் மைனர்களுடைய நன்மை எவ்விதம் நிறைவேறத்தக்கது என்ற அம்சத்தைக் குறித்து என் ருசுவானது சென்னை ஐக்கோர்ட்டாரால் விலக்கப்பட்டது என்று வினவினர். அதற்கு மறுமொழி வரவில்லை. சென்னை ஐக்கோர்ட்டில் மைனர்கள் கட்சிக்காரர்களாக இல்லாத காலத்தில் அவர்களுடைய மைனரிட்டி காலத்தை அவர்கள் தகவலன்றி 3 வருஷம் வரையில் அதிகப்படுத்திவிட்டார்களே என்று ஜட்ஜ் லார்டு பிலச்சர் மூல்டன் என்பவர் சொன்னர்.

* * *

Mrs. பெஸண்டு அம்மையாரின் வக்கீல் ஒன்றரைநாள் வரையில் பேசினர்கள். மைனர்களுக்காக ஆஜராயிருந்த ஸ்காட்லண்ட் லார்டு அட்வகேட் அவர்களை, மைனர்களுடைய விருப்பம் யாதென்று நேராகத்தெரிந்துகொண்டிருக்கிறீர்களாவென்று பிரிவிகவுன்சில் ஜட்ஜ்கள் கேட்டார்கள். அதற்கு லார்டு அட்வகேட் அவர்கள் தான் நேராகத்தெரிந்துகொண்டிருக்கிறதாகவும் அவர்களுக்கு இந்தியாவுக்குத் திரும்புவதில் சுத்தமாக விருப்பமில்லையென்றும் இங்கிலாந்திலேயே இருப்பதில் பிரியமுள்ளவர்களாயிருக்கிறார்களென்றும் சொன்னர்கள். அதன்பிறகு அப்பீல் பிரதிவாதியின் வக்கீலாகிய மிஸ்டர் கென்வொர்த்தி பிரௌன் அவர் கட்சியைக் குறித்து எடுத்துப்பேச ஆரம்பித்ததில் லார்டு சான்ஸெலரவர்கள் வாதியின் வியாச்சியம் சரியான யோசனையின்பேரில் கொண்டுவரப்படவில்லை

யென்றும் அது சட்டப்பிரகாரம் நிலைநிற்கத்தக்கதில்லை யென்றும் ஆகையால் சென்னை ஐக்கோர்ட்டுத் தீர்மானம் மாற்றப்படவேண்டுமென்றும் தாம் அபிப்பிராயப்பட்டிருப்பதாகச் சொன்னதின்பேரில் மிஸ்டர் கென்வொர்த்தி பிரௌன் தான் அதிகமாய்ப்பேசவேண்டியதில்லை யென்று சொல்லி நின்று கொண்டார்.

* * *

மிஸ்டர் கென்வொர்த்தி பிரௌன் தன்னுடைய கட்சிக்காரராகிய நாராயணய்யாவை செலவுதொகை கொடுக்கச்சொல்லக் கூடாதென்று கேட்டுக்கொண்டதில் அதற்கு பிரிவிகவுன்ஸில் ஜட்ஜ் லார்டு பார்க்கர் உங்களுடைய கட்சிக்காரர் கோர்ட்டில் தப்பான வியாச்சியத்தைக் கொண்டுவந்தார். ருசு செய்யக்கூடாத அபாண்டமான குற்றங்களைச் சாட்டினபடியால் ஏன் அவர் எதிர்க்கட்சியின் செலவு தொகையைக் கொடுக்கக்கூடாது? என்று கேட்டார். இவ்விதமாக சென்னை ஐக்கோர்ட்டுத் தீர்மானமானது பிரிவிகவுன்சிலில் ரத்து செய்யப்பெற்றது. "மைனர்களில்" மூத்தவராகிய ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தியானவர் சென்ற௵ மே௴ ந்தில் பதினெண்பிராயமாகி மேஜரானார். அவரை இனிமீது துயருவதும் அசாத்தியமான காரியம். கனிஷ்டராகிய நித்தியானந்தர் என்போருக்கு இன்னும் பதினெட்டு வயதாகவில்லை. அவர் விஷயமாக மிஸ்டர் ஜி. நாராயணையா ஏதாவது நடவடிக்கை நடத்தவேண்டுமானால் அதை சீமையில் செய்யவேண்டுமே யல்லாது இந்தியாவில் செய்ய ஒவ்வாது. இனிமீது இங்கிலாந்தில் ஏதாவது நடவடிக்கை நடத்தினாலும் மைனருடைய நன்மை கருதப்படுமே யல்லாது கட்சிக்காரர்களுடையன க்ஷாத்திரத்திற்கு இடங்கொடுக்கப்படமாட்டாதென்று பிரிவிகவுன்சில் தீர்மானம் நன்கு விளக்குகின்றது. க்ஷாத்திரத்திற்கு இடங்கொடுக்கப்படாமற்போனால் மிஸ்டர் ஜி. நாராயணய்யாவின் சிநேகிதர்களுக்கு இந்த விவகாரம் ருசியைக் கொடுக்காது என்று தோன்றுகிறது.

* * *

இவ்விவகாரத்திலிருந்து பிரயோஜனத்தைக் கொடுக்கக்கூடிய பல விஷயங்களை நாம் ஊகிக்கலாம். Mr. நாராயணய்யாவின் குமாரர்களின் நன்மையை மாதுஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மையார்

யார் கருதி அவர்களுடைய வித்தியாபிவிருத்தியைக் கைக்கொண்டனரென்றும், அப்படிக் கைக்கொண்ட கடமையை நிறைவேற்றுவதற்காக அவருடைய பிரயாசை தனம் இவைகளை உபயோகப்படுத்திக் கொண்டு வந்தனரென்றும், மிஸ்டர் ஜி. நாராயணய்யாவுக்கும் அவருக்கு இந்த விவகாரத்தில் ஒத்தாசையாயிருந்தவர்களுக்கும் நன்றாகத் தெரிந்த விஷயமென்றே நாம் நிதானிக்கலாம். அப்படியிருக்கும் நிலைமையில் ஏன் இவ்விதமான துர்விவகாரத்தில் பிரவேசித்து துவேஷத்தைக் காட்டித் தாங்கள் வீண்செலவு செய்து சிரமப்பட்டதுமல்லாமல் Mrs. அன்னி பெஸண்டு அம்மையாரின் காலத்தையும் பொருளையும் சிரமத்தையும் வீணாக்கச்செய்வானேன்?

*
* *

உலகத்தில் தனது நலத்தைத் துறந்து பிறர்நலத்தையே கருதி டப்போர்களை சுயநலத்தைக்கருதும் உலகோர் நன்கறியார்கள். அப்படி சுயநலத்தைக் கருதி நடப்போருடைய ஒவ்வொரு செய்கையும் அந்நலத்தைக்கருதிச் செய்யப்படுவதாலும் அதைத்தவிர செய்கைக்கு வேறுகாரணம் அவர்கள் அறியாதபடியாலும் சுயநலத்தைக்கருதாமல் உலக க்ஷேமத்தையே நாடிச் செய்வோர்களின் செயல்கள் அவர்களுக்குப் புலப்படுவதில்லை. ஆகையால் இவ்விதம் உலகக்ஷேமத்தையே கைக்கொண்டு கைங்கரியம் புரியும் பெரியோர்களிடத்தில் அச் சுயகாரியக்காரர்கள் தம் சிற்றறிவுக்கும் கிஞ்சித் அனுபவத்திற்கும் ஒத்த சுயகாரிய நோக்கங்களையும் கருத்துகளையும் ஆரோபணம் செய்து அவர்களுடைய செய்கைகளில் விபரீத அர்த்தங்களைக் கற்பனைசெய்து அவர்களைத் துவேஷித்து நிந்திக்கிறார்கள். இது இக்காலத்தில் மட்டும் உள்ளதல்ல. புராணாதிகளிலும் முன் காலத்திய சரித்திர ரூபமாகவும் நாம் அநேக திருஷ்டாந்தங்களைப் பார்க்கலாம். ஆகையால் நமது இந்திய தேசத்தில் கொண்டாடப்படுகிற ரிஷிகளின் சேஷராய் தன்னுடையதேகவலிமை மனோசக்திகள் தனம் முதலியவைகளை அவர்களால் ஆக்ஞாபிக்கப்பட்ட கைங்கரியங்களுக்கு அர்ப்பணம் செய்து கொண்டு வருகிற Mrs அன்னிபெஸண்டு அம்மையாரிடத்திலும் அவரோடு வேலை செய்து கொண்டு வருகிறவர்களிடத்தும் அந்தரிஷிகளைத் துவேஷிக்கிறவர்களும் ரிஷிகளைவெளிப்படையாகவும் நாமார்த்தமாகவும் கொண்டாடி ரிஷிகளின் கருத்து

களுக்கு நேர் விரோதமாக நடக்கிறவர்களும் வெறுப்பைக்காட்டி, அவ் வெறுப்புக்குத் தகுதியான செய்கைகளைச் செய்வது ஆச்சரியமான விஷயம் அல்ல. இங்கிது நிற்க.

* * *

வேறு காரணம் ஒன்று உளது. உலக சரித்திரத்தில் கல்பாந்தரங்களில் சில முக்கியமான காலங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தக்காலங்களில் அவதார புருஷர்கள் அவர்களோடு ஜன்மஜன்மங்களாக உழைத்துக் கொண்டுவந்த அவர்களுடைய சிஷ்யர்களுடன் உற்பவிக்கிறார்கள். உலகத்திலுள்ளோரிடத்து பிராசீனமாய் ஏற்பட்ட தர்மங்கள் கால இயல்புக்குத் தக்கவாறு மாறாதபடியால் அவைகளின் பலம் குன்றவும், உலகத்திலுள்ளோருடைய லௌகிக நாகரீகமும் சக்திகளும் அதிகரிக்கவும், அவைகளுக்குத் தக்கவாறு தர்மோபதேசம் செய்யவும் அவதரிக்கின்றனர். தற்காலம் அப்படியவதரிக்கும் காலங்களில் ஒன்று. உலகத்தில் எங்கும் மாறுதல்கள் அதிவிரைவாக நடந்துகொண்டிருக்கின்றன. நீராவி, மின்ஸாரசக்தி இவைகளால் அதி விரைவாய்ச்செல்லும் ரயில், புகைக்கப்பல் முதலிய வாகனாதிகளால் தேசங்களோடு தேசங்களும் ஜாதிகளோடு ஜாதிகளும் ஒன்று சேர்க்கப்படுகின்றன. கல்வியினுடைய பரவுதலால் விவேகம் எங்கும் எல்லா ஜாதிகளுக்குள்ளும் அதிகரித்துக் கொண்டும் வருகின்றது. பலகலைகளும் அவைகளினுடைய அபிவிருத்தியினால் அவைகளை ஆதாரமாகக்கொண்ட யந்திரங்களும் ஸூத்திரங்களும் நூதனம் நூதனமாக ஏற்படுகின்றன. உலகத்தில் தேசத்தார்களுக்குள் யுத்தம் ஏற்படக்கூடாது, சமாதானம் மேலிட வேண்டும், என்று நோக்கங்கொண்டவர்கள் அதிகரித்துக்கொண்டுவருகின்றனர் முன்காலத்திய விதிகள் கால தர்மங்களுக்குத் தகுந்த பிரகாரம் இடங்கொடாமல் நிற்கின்றன. அவைகள் மாறுபாட்டை அடைவதில் சரியான வழியில் கெடுதலின்றி ஒழுங்காகச் செய்ய அவதார புருஷர்களால் கூடுமேயொழிய சாதாரண மனிதர்களால் கூடாதாம்.

* * *

நாம் மெல்ல சௌகரியமாக நடந்து கொண்டிருக்கும்போது நம்மை வேகமாகத் துரிதப்படுத்துகிறவர்களின் மேல் நமக்கு நல்லெ

ண்ணம் ஏற்படுகிறதில்லை. நாம் ஒரு வழியாகச் சென்று கொண்டிருக்கும் பொழுது வேறு வழி ஒன்று நல்லதாயிருப்பினும் அவ்வழியாய் நம்மைச்செல்லச் சொல்பவரிடம் நமக்கு விசுவாசம்உண்டாகிறதில்லை. அதுபோல் உலக சரித்திரத்தில் அவதார புருஷர்கள்தோன்றுங்கால் அவர்களை அவர்கள் ஜீவந்தராயிருக்கும்பொழுது ஜனங்கள் நன்கு மதிக்கிறதில்லை. அவர்கள் காலத்தில் அவர்கள் துவேஷிக்கப்படுகிறார்கள். அவர்கள் காலஞ்சென்றபிறகு அவர்கள் ஜனங்களால் கொண்டாடப்படுகிறார்கள். இது உலக இயல்பு. உலகசரித்திர ஆராய்ச்சியால் நன்கு விளங்கும். ஸ்ரீ ராமாவதாரத்தில் மகுடாபிஷேக தருணத்தில் அதுநீங்கி ஸ்ரீ ராமர் நகரத்தைவிட்டு கானகத்தை அடைந்து பதினான்கு வருஷம் காலம் கழித்தனர். இராவணாதிகளுடைய தீச்செய்கைகள் எல்லோருக்கும் தெரியுமல்லவா? ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் கம்சனுடைய தீங்கையும் சிசுபாலாதிகளுடைய நிந்தைகளையும் எவர் அறியார்?

*
* *

இதுபோல் ஸ்ரீ ராமானுஜாசாரியர் உயிர் தப்பி ஊர் விட்டு ஊர் போக நேரிட்டது. ஸ்ரீ சங்கராசாரியர் அவர் தாயார் காலம் சென்றபோது அவர் பிரேதத்தை தகனத்துக்குக் கொண்டுபோக அவர் சுற்றத்தாரின் உதவியைப் பெறவில்லையென்று ஒரு ஐதிகம் உண்டு. கிறிஸ்துவ மதஸ்தாபகர் ஜனங்களால் கொல்லப்பட்டார். மகமதிய மதத்தை ஏற்படுத்தின மகம்மது என்பவர் சத்துருக்களுக்குப் பயந்து ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச்செல்லும்படி நேரிட்டது. ஆகையால் தற்காலத்திலும் அவ்வித இடையூறுகளும் தோன்றுவதும் மறைவதும் சகஜமே.

*
* *

ஆகையால் இவ்விக்கினங்கள் ஏற்படினும் அவைகளால் சிரமங்கள் நேரிடினும் அவைகள் உலக கதியைத்தடுக்கலாகுமோ? தேவர்களும் ரிஷிகளும் விகாஸ முறையில் ஏற்படுத்துகிற காரியங்களை மனிதர்கள் நிறுத்தக் கூடுமோ? மனிதர்களால் செய்யப்படும் விக்னங்கள் நடக்கப் போகிற விஷயங்கள் நேரும் காலத்தை ஒருக்கால் சற்று தாமஸமாகச் செய்யலாம். அதைக் காட்டிலும் அதிகக் கெடுதி

செப்ப அவைகளுக்குச் சக்தியில்லை. சர்வ மதங்களுக்கும் பரமாசாரியராயிருப்பவர் தோன்றுவதைத் தடுக்கத் தக்கனவல்ல. மனிதர்களுடைய நற்குணங்களும் நற்செய்கைகளும் மட்டும் அவருடைய காரியங்களை நிறைவேற்றுகின்றனவென்று நாம் நினைப்பது சரியல்ல. மனிதருடைய தீய குணங்களையும் தீய செயல்களையும் அவர்களது அறியாமையையும் அவ்வறியாமையால் அவர்கள் செய்யும் இடையூறுகளையும் உலக விகாஸ முறையில் நடக்க வேண்டிய விஷயங்களுக்கு அனுகுணமாகச் செய்ய ரிஷிகளுக்கும் தேவதைகளுக்கும் வலிமையுண்டு. இதை பலர் நன்குணர்ந்தாரில்லை.

***

லண்டன் பட்டணத்தில் 15 லக்ஷரூபாய் மதிப்பின்பேரில் பிரஹ்மஞான கட்டிடம் (Theosophical Headquarters Building) கட்ட நமது அக்கிராசனாதிபதியவர்கள் ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாக ராய்ட்டர் தந்தி மூலமாய் சமாசாரம் கிடைத்திருக்கிறது. இந்த பிரிட்டிஷ் ராஜ்ய மண்டலத்தின் பிரதான நகரில்நமது சபையின் பெருமைக்குத் தக்க கட்டிடம் அமைய வேண்டியதும் நியாயமே.

பத்திராதிபர்.

நன்மொழி.

என்பே விறகா யிறைச்சி யறுத்திட்டுப்
பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினு
மன்போ டுருகி யகங்குழை வார்க்கன்றி
யென்போன் மணியினை யெய்தவொண் ணாதே—திருமந்திரம்

பூலோக புவர்லோக ஸம்பந்தம்.

(4-ம் தொகுதி 325-ம் பக்கத்தொடர்ச்சி)

இவ்வாறாக புவர்லோகவாஸிகள் தான் பூலோகத்தைப் பார்த்தல் இயலாதென்றாலும் நம்மாலும் பூலோகத்தின் முழுமையும் பார்த்தல் இயலாதாம். நாம் பூலோகத்தின் பிருதிவீ ரூபமான பதார்த்தங்களையும் (Solids), அப்பு ரூபமான பதார்த்தங்களையும் (Liquids) மட்டும் ஸ்தூல நேத்திரங்களால் பார்க்கக்கூடியவர்கள். தேஜஸ் ரூபமான பதார்த்தங்களில் நிர்வர்ணமா யிருக்கிறவைகளைக் கூட (Colourless gases) நாம் பார்த்தல் கூடாததாகவிருக்கிறது. பூலோகத்தின் திரவியம் இம்மூன்று பிரிவுகளைக் காட்டிலும் இன்னும் அதிசூக்ஷ்மமான நான்கு பிரிவுகளை உடையது. ஆக பூலோக திரவியம் ஏழு பிரிவுகளை உடையது. அவையாவன:—பிருதிவீ (Solid) அப்பு (Liquid), தேஜஸ் (Gas), வாயு (Etheric) ஆகாசம் (Super-etheric), அணு (Sub-Atomic), பரமாணு (Atomic). மேற்கூறிய முதல் மூன்று வகையான பூலோக திரவியத்தைத்தான் நாம் நம்முடைய இந்திரியங்களால் அறிகிறோம். மற்ற நான்கு பிரிவுகளையும் நாம் அறிகிலேம். ஸூக்ஷ்ம தர்சிகள் தான் (Clairvoyants) அவைகளை யறிவார்கள். பூலோகத்தில் ஏழு பிரிவுகள் ஏற்பட்டிருப்பன போல மற்றைய ஆறு மேல் லோகங்களிலும் * அந்தந்த லோகதிரவியத்தின் கனம் நயத்திற்குத் தக்கவாறு ஏழு பிரிவுகள் உள்ளன. இறந்தவர்களும் புவர்லோகத்தினின்று நம்முடைய பூலோகத்தைப் பார்க்கக் கூடியவர்களேயல்லர். பூலோக வஸ்துக்களினுடைய புவர்லோக பிரதிரூபங்களையும் (Astral Counterparts) பூர்ணமாகக் காணக்கூடியவர்களல்லர். புவர்லோகத்தில் மேற்கூறிய ஏழு நிலைகளில் தாம் எந்நிலையில் உள்ளாரோ, அந்நிலையிலுள்ள புவர்லோக பிரதிரூபத்தைமட்டும்தான் காணக்கூடும். பூலோகத்தில் வஸிக்கும்பொழுதே, பூலோக திரவியத்தின் பிருதிவீ, அப்பு, தேஜஸ் என்ற மூன்றுவித ஸ்தூல வஸ்துக்களைக்காட்டிலும் ஸூக்ஷ்மமான மற்ற நான்கு வகுப்புக்களையும், புவர்லோக திரவியத்தையும் அடிக்

---

* பிரஹ்மஞான தர்சனத்தில் பிரஸ்தாபித்திருக்கிற கிரமப்படி ஆறுமேல் லோகங்களாவன:—புவர் லோகம், ஸுவர்-மஹர் லோகம், ஜநோதபோ லோகம், ஸத்திய லோகம், அநுபாதக லோகம், ஆதி லோகம் என்பனவாம்.

கடி பார்த்துப் பழகித் தேர்ந்தவர்களுக்குத்தான் பூலோக புவர்லோகங்களில் பூர்ணமான திருஷ்டி ஏற்படுகின்றது.

இறந்தவர்கள் முதன் முதலில் பூலோக வஸ்துக்களின் புவர்லோகப் பிரதிரூபங்களைப் பார்த்தவுடன் இன்னவஸ்துவின் பிரதிரூபம்தான் இன்னது என்று தெரிந்துகொள்வது அவர்களுக்கஸாத்தியமா யிருக்கிறது. இதற்குத் தேர்ந்த அநுபவம் அதாவது பழக்கம் வேண்டும். சிற்சில வீடுகளில் குரளி விளையாடுகிறதென்று நாம் கேள்விப்படுகிறபடி, புவர்லோக வாஸிகள் எந்தெந்த பூலோக வஸ்துக்களுடன் ஸம்பந்திக்கவேண்டி இச்சிக்கிறார்களோ, அவ்வஸ்துக்களின் புவர்லோகப் பிரதிரூபங்களைத் தெரிந்து கொள்ளாமல் வேறேதேனும் வஸ்துக்களின் புவர்லோகப் பிரதிரூபங்களைப் பற்றிக் கொண்டு முயற்சிக்கிறார்கள். இன்னின்ன புவர்லோகப் பிரதிரூபங்கள் இன்னின்ன பூலோக வஸ்துக்களுக்குத்தான் உரியவை என்று தீர்மானிக்கும் திறமை தேர்ந்த பழக்கத்தினாலும் அறிவினாலும் உண்டாகக்கூடியது. பூலோகத்தில் வஸிக்கும்பொழுதே இவ்வாரூப விஷயங்களைப் பற்றி ஆராய்ந்திருந்தாலொழிய புவர்லோகத்தில் மேற்சொல்லிய திறமை உண்டாகாது.

புவர்லோக வாஸியொருவர் நம்முடைய லோகத்தில் நடக்கும் நாடகங்களை (Dramas) அவைகளின் புவர்லோகப் பிரதிரூபங்களைப் பார்த்து ஆனந்திக்கக்கூடுமா என்றும், ஜனங்கள் நிறைந்திருக்கும் நாடகக் கொட்டகைகளில் அவர்கள் வந்திருந்து கேட்க இடமுண்டா என்றும் ஒரு சந்தேகம் நிகழலாம். இறந்துபோனவர் ஜனங்கள் நிறைந்த நாடகக் கொட்டகையின் புவர்லோக பிரதிரூபத்தை நன்றாய்ப் பார்க்கக் கூடும். ஆயினும் அவர்கள் நாடகத்தைப் பார்த்து ஆநந்தப்படமுடியாது. ஏனென்றால் நாடகக் கொட்டகையிலுள்ள ஸீன்களின் அலங்காரத்தையும் நடிப்பவர்களின் வேஷங்களின் மினுமினுப்பையும் நாம் பார்ப்பதைப் போல் அவர்கள் பார்த்தலறிது. தவிரவும் சிருங்கார ரஸம், சோகரசம், வீரரஸம் முதலிய பாகங்கள் நடிக்கப்பெறும் பொழுது, அவைகள் வெளி வேஷத்தினின்று மட்டும் உண்டாவதால், நடிகளின் மநத்தில் அவ்வித ரஸங்களுக்குத்தக்க உண்மையான கோப தாபம் முதலிய மநவுணர்ச்சிகள்

(Emotions) எழுகின்றனவல்ல. ஆகையால் நாடகமானது புவர்லோகத்தினரால்நாம் பார்ப்பதுபோல் பார்க்கப்படுவதில்லை புவர்லோக சரீரங்கள்ஒன்றுக்கொன்று உரசிக்கொள்ளாமல் ஊடுருவிக்கலந்து அமைந்துநிற்கும் இயல்பின. சற்று ஆலோசிப்பவர்களுக்கு இவ்வுண்மை நன்கு விளங்கும். நாம் ரயில் வண்டிகளில் போகும்போது ஒருவர்க்கொருவர் வெகு சமீபமாய் உட்கார்ந்து போகிறோம். அப்போது நம்முடைய புவர்லோக சரீரங்கள் ஒன்றில் மற்றொன்று புகுந்து ஊடுருவிக்கலந்து நிற்கின்றன. புவர்லோக திரவியம் வெகு நெகிழ்ச்சியுள்ளதாகையால் புவர்லோக சரீரங்கள் ஊடுருவி நிற்றல் வெகு சுலபமாகின்றது. ஆனாலும் அவ்விதச் சேர்க்கையால் புவர்லோக சரீரங்கள் சலிக்கும் சலநம் மாறுபடுகின்றது.

அச்சலன மாறுதலால் அதற்கு சம்பந்தித்த உணர்வும் மாறுகிறது. அதாவது குரோதம், துரோஹம், ஈரிஷை முதலிய துர்க்குணங்கள் நிறைந்தவர்களுக்கு சமீபத்தில் அமர்ந்திருத்தலால், நம்முடைய புவர்லோக சரீரமும் அக்குணங்களுக்குத் தகுந்த மாறுபாட்டையடைகின்றது. ஆகையால், அத்தகையர்களுக்குச் சமீபத்தில் உட்காருதலே தீமை விளைக்கக் கூடியது. அம்மாதிரியே சுறுசுறுப்புள்ளவர்களுக்கும் ஸற்குணங்கள் வாய்ந்தவருக்கும் அருகாமையில் உட்கார்ந்த மாத்திரத்திலேயே அவர்களுடைய பாவனை நம் சீலத்தில் பரவுகிறது. இது 'ஸஹவாஸ தோஷம்' என்னும் வசனத்தை நன்கு விளக்குகிறது. இறந்துபோன நண்பரொருவர் தாராளமாய் நாடகக் கொட்டகையில் இடந்தேடி அமர்ந்திருக்கக் கூடும். கொட்டகையில் தரையிலும் பெஞ்சுகளிலும் மட்டும் ஜனங்கள் உட்காருவார்கள். அவர்கள் தலைக்கு உயர, வாயு மண்டலத்தில், இறந்த நண்பர் உட்காருவதற்குத் தடையேது?

தற்கொலை புரிந்திறக்கிறவன், படிக்க வேண்டிய பாடங்கள் ஏவை உள்ளனவோ அவைகளைப் படிக்காமல் பள்ளிக்கூடத்தை விட்டோடுகின்ற பையனுக்கொப்பாவான். ஸ்வாபாவிகமாக நடக்க வேண்டிய காரியத்தைத் தான் பிரயத்னப்பட்டுச் செய்யவேண்டிய காரியமென்று தப்பெண்ணம் கொண்டவர்கள் தான் இவ்விதத் தவ

றுகள் செய்வார்கள். பிரபஞ்ச நியதிக்கு மாறாக நடப்பதின் பலன்கள் அற்பமானவையென நினைக்கத் தக்கதல்ல. தற்கொலைபோன்ற பிரபஞ்ச நியதிக்கு மாறான கர்மங்களின் பலன்கள் அடுத்த அநேக ஜன்மங்களில் கர்த்தாவைத் தொடரும். தற்கொலை புரிந்து சாகிறவன் அல்லது திடீரென ஏதாவதொரு ஸம்பவத்தால் சாகிறவன் இவ்விருவர்களுக்கும் மரணம் நேரும் விதம் ஒரே மாதிரியானதுதான். இவ்விருவரும் ஒரேமாதிரி திடீரென்று தான் புவர்லோகத்தில் பிரவேசிக்கிறார்கள். ஆனால் இருவர்களுக்கும் வித்யாஸம் அதிகமாக உள்ளது. எதிர்பாராத ஸம்பவத்தால் ஜடிதியில் மரிக்கிறவன் புவர்லோகத்தின் கீழ்ப்படிகளை யெல்லாம் பிரக்ஞையின்றித் தாண்டி மேற்படிகளில் சென்ற பிற்பாடு தான் பிரக்ஞையைப் பெறுகின்றமையால், கீழ்ப்படிகளில் துக்கமடைய மாட்டான். ஆனால் தற்கொலை புரிகிறவனோ தற்காலத்தில் தன் நிலைமையில் வெறுப்புள்ளவனாய் தான் சாகவேண்டுமென்ற தீர்மானமுள்ளவனாயினும், இறந்துவிட்டால் எங்கெங்கு செல்வோமோ எப்படி எப்படி யிருப்போமோ என்ற பயமும், இறக்கும்போது படவேண்டிய வருத்த மிவ்வளவிருக்கும் என்ற முன் நினைப்பும் பொருந்தினவனாய் சஞ்சலப்பட்ட மனத்துடனே சாகின்றானாகையால் புவர்லோகத்தின் கீழ்ப்படிகளில் பயமும் நடுக்கமும் பெறுகிறான். தானே தனக்குப்பயத்தை உண்டுபண்ணிக்கொண்ட இவனை ஒருவரும் காப்பாற்ற முடியாது. புவர்லோகத்தில் இவன் தன் நிலைமையை நன்கறிந்து கொள்ளுமாறு அன்பார்ந்த சிலநண்பர் இவனுக்கறிவுறுத்தி, தெளிவித்து, பொறுமை, விடாமுயற்சி, நன்னம்பிக்கை என்ற இந்நற்குணங்களை இவனிடம் புகட்டி இவனைத்தேற்றக்கூடும்.

தற்கொலை புரிதல் பெருங்குற்றமே யாயினும், தற்கொலையுண்ட எல்லாரையும் பற்றித் தீய அபிப்பிராயம் நாம் கொண்டு அவர்களைத் துவேஷிக்கவேண்டாம். அவரவர்கள் எத்தகைய ஸந்தர்ப்பங்களால் அவ்விதம் தூண்டப்பட்டார்க ளென்பதை நாமறியோம். அவரவர் குற்றத்திற்குத் தக்கபடி கொஞ்சமேனும் நியாயமுறை தவறாமல் பிரபஞ்ச நியதி நிகழ்கின்றது.

மரணத்திற்குப் பின் ஒருவனின் புவர்லோக வாஸத்தைப்பற்
றிய ஆராய்ச்சி முறையில் இரண்டு முக்கிய விஷயங்கள் கவனிக்கப்
பட வேண்டியன. (1) புவர்லோகத்தில் எந்தப்பிரிவில் எவ்வளவுகா
லம் வஸிக்கிறான் என்பது. (2) அதில் அவன் பிரக்ஞையின் நிகழ்ச்சி
எம்மட்டு என்பது. பூலோகத்தில் வஸிக்கும்போது, ஒருவன் தன்
புவர்லோக சரீரத்தில் எத்தகைய திரவியத்தை அதிகமாய் ஏற்படு
த்தியுள்ளானோ அதே தரமான புவர்லோகத்தின் நிலையில் அல்லது
படியில் நீடித்த காலம் சஞ்சரிக்கிறான். புவர்லோகத்தின் குறிப்பி
ட்ட ஒரு பிரிவில் பிரக்ஞையின் நிகழ்ச்சி மேற்கூறிய விதியையநு
ஸரித்து அதிகப்படுவதல்ல. இதைத் தெளிவாய் விவரிக்கக் கூடிய
ஒரு உதாரணத்தை எடுத்துக்கொண்டு விசாரிப்போம். ஒருவன்
முன் ஜன்மத்தினின்று இச் சன்மத்திற்குக் கொண்டு வந்திருக்கும்
வாஸனை ஸ்வபாவங்கள் பலவாறாய் உள்ளன. அவைகள் கீழ்க்கடை
யான ஸ்வபாவங்களா யிருக்கின் அவைகளுக்குக் கருவியாயுள்ள சரீ
ரங்களின் திரவியங்களும் நுட்பமாயிரா. இந்த ஜன்மத்தில் சிறு
வயதிலேயே இக் கீழான ஸ்வபாவங்களை யடக்க வேண்டுமென்று
அறிந்து அதில் முயன்றாலும் அவனுடைய முயற்சியானது பூர்ண
மாய் நிறைவேறாது. அநேக தடவைகளில் தவறுவான். ஒரு
கெட்ட வழியில் சிந்தையானது செல்லுதலை உறுதியாய்த் தடுத்து,
அக் கெட்ட காரியத்திற்குப் பதிலாக ஒரு நற் காரியத்தை யெடுத்
துக்கொண்டு இவ்விதமாகத் தன்னுடைய புவர்லோக சரீரத்தில் நய
மான திரவியத்தை யதிகமாக ஏற்படுத்துவானாகில், அவனுடைய
முயற்சி முற்றுப்பெறும். சன்னஞ் சன்னமா யிருப்பினும் நிச்சய
மாய் விருத்தி யடைவான். இப்படியே அவனுடைய அபிவிருத்தி
முறையில் பாதி தூரம் சென்று உடனே இறந்துவிட்டானானால் அவ
னுடையபுவர்லோக சரீரத்தில் கீழ்த்தரமான திரவியம் இன்னும்பாதி
இருக்கின்றமையால் இறந்தவுடன் புவர்லோகத்தில் கீழ்ப்படிகளில்
தான்சஞ்சரித்துக் கொண் டிருப்பான். ஆயினும் அக் கீழ்த்தரமான
புவர்லோக திரவியத்தை இந்த ஜன்மத்தில் கொஞ்சமேனும் உப
யோகித்து எவ்விதக் கீழான ஸ்வபாவத்தையும் பெற்றானில்லையாகை
யால், இறந்தவுடன் புவர்லோகத்துக் கீழ்த்தரமான பாகத்திலேயே
முதலில் வஸிக்கத்தொடங்கினாலும், பூலோகத்தில் ஏற்படாத புதிய

வழக்கமொன்று அங்கே ஏற்படுவதில்லை. அதனால் புவர்லோகத்தின் கீழ்ப்படிகளில் பிரக்ஞையே யற்று இருக்கிறான். கொஞ்ச காலத்திற்கெல்லாம் புவர்லோகத்தின் கீழான திரவியங்கள் நசித்துப்போய் தன்னுடைய புவர்லோக சரீரத்தில் நயமான திரவியங்கள் அமையப் பெறுகிறான். அவன் முதலில் பிரக்ஞையற் றிருத்தலாவது, நாம் தூங்கும்போது எப்படி நமக்கு வெளிவிஷயங்களின் பிரக்ஞை நிகழ்வதில்லையோ, அப்படி புவர்லோகத்தின் கீழ்ப்படிகளில் பிரக்ஞையற்றுத் தூங்கி மேற்படிகளில் விழிக்கிறான்.

இறந்தவர்களுடைய புவர்லோக வாஸத்தைப்பற்றிக் கவனிக்க வேண்டிய மேற்கூறிய முக்கியமான விஷயங்கள் இரண்டும் இறப்பின் இயற்கையைப் பற்றி யில்லாமல், பூலோக வாஸத்தில் அவர்களுடைய ஒழுக்கத்தையே பற்றி யிருக்கிறது. திடீரென நேர்ந்த எவ்வளவு பயங்கரமான ஸம்பவத்தாலும் ஒருவன் இறந்தால், அவன் பாதிக்கப்படுகின்றானில்லை என்றாலும், கிறிஸ்தவ மதத்தினர்களின் ஜபத்தில் ஒரு வசநமிருக்கிறது. அதன் கருத்தை யிங்கு ஆராய்வோம். அதாவது "எதிர்பாராத மரணத்தினின்று எங்களைத்தப் புவியும்" என்றுகிறிஸ்தவர்கள் ஈசுவரனை வேண்டிக்கொள்கிறார்கள். ஏனெனில் எதிர்பாராத திடீரென்ற மரணத்தால் புவர்லோகத்தில் இவர்களுக்குக்கெடுதி உண்டாகாதாயினும் நன்மைவிளைவதேயில்லை. தகுந்த வயஸ் சென்று நெடுநாளாக வியாதிஸ்தராகப் படுக்கையிற் கிடந்து இறக்கிறவர்களுக்கோ வென்றால், இறக்கு முன்னமேயே புவர்லோக சரீரமும் அநேகமாய்த் தளர்ந்து அதன் அணுக்கள் சற்று நெகிழ்ச்சி பெற்று, புவர்லோகத்தின் பிரக்ஞை வந்தவுடன் தாம் செய்ய வேண்டிய அநேக வேலைகளை இறக்குமுன்னமேயே செய்து விட்டார்களாகையால் அவர்களுக்கு புவர்லோகத்தில் அபிவிருத்தி சீக்கிரமாக நிகழும்.

(இன்னும் வரும்)

B. S. R. சுப்பிரமணியன்.

பிரஹ்மக்ஞானதர்சநம் (பாலபாடம்).

(4-ம் தொகுதி 446-ம் பக்கத் தொடர்ச்சி)

11-வது அத்தியாயம்.

இரசவாதம்.

கடைசியாக நாம் மாற்ற வேண்டிய விஷயம் செய்கையாம். அது கடைசியானது. ஏனெனில் அது எண்ணத்தினுடையவும் இச்சையினுடையவும் வெளிப்படையான வேலை. எண்ணங்களும் இச்சைகளும் நமக்குள் அடக்க முடியாமல் பலப்படும்போது அவைகள் செய்கைகளாக முடிகின்றன.

பூர்வ ஜன்மங்களில் நீ செய்த செய்கைகள் இந்த ஜன்மத்தில் உனக்கு வீடு, செல்வம் அல்லது தரித்திரத்தையும் சகவாச நிலைமையையும் கொடுத்திருக்கிறது. நீ இந்த ஜன்மத்தில் செய்கிற செய்கைகள் அடுத்த ஜன்மங்களில் இவைகளைத் தரும்.

நீ உபகாரமான காரியங்களைச் செய்தால் அன்புள்ள பலன்களை அடையலாம். உன்னுடைய பணம், ஆகாரம், வஸ்திரங்கள், உனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிற பொருள்கள் இவைகளைப் பிறருக்குப் பகிர்ந்து கொடு. சீக்கிரத்தி:லில்லாவிட்டாலும் காலக்கிரமத்தில் உனக்குப் பிறரிடமிருந்து பணம், ஆகாரம், வஸ்திரங்கள், இன்பமுள்ள பொருள்கள் இவைகளெல்லாம் மறுபடியும் கிடைக்கும்.

அவைகள் மறுபடியும் கிடைப்பதற்கு வெகுகாலம் சென்றால் நீ பழைய கடன்களைச் செலுத்தியிருக்கிறாயென்பதற்கு அறிகுறியாம். நீ முன் செய்த குரூரமான செய்கைகளின் பலன்தான் மேற்சொன்ன பழைய கடன். ஆகையால் நல்ல பொருள் கிடைப்பதற்கு கால தாமசம் நேரிட்டிருக்கின்றது. ஆனாலும் உனக்கு சீக்கிரமாகவாவது தாமசமாகவாவது அவைகள் திரும்பிவரும்.

நீ, சுயநயம் பாராட்டுகிறவனாகவும் அல்லது பேராசையுள்ளவனாகவும் அல்லது குரூரமுள்ளவனாகவுமிருந்தால் நீ ஏழையாகவும் பசியால் வருந்துகிறவனாயும் பிறரால் கொடுமையாய் நடத்தப்படுகிறவனாயும் ஆவாய். சுயநயம் பாராட்டாதவனாகவும் அன்புள்ளவனாகவும் உபகாரியாகவுமிருந்தால் ஒரு காலத்தில் உனக்கொருவர் கவலைப்பட்டு அன்பு பாராட்டி உபகாரம் செய்வார்கள். இதுதான் சுகமடைவதற்கு நிச்சயமான மார்க்கம். ஏனெனில் மேற்சொன்ன சற்குணங்கள் மோக்ஷ மார்க்கத்தில் களைப்படைந்த பிரயாணிகளுக்கு சந்தோஷமான உதவியைக் கொடுக்கும்.

உன்னிலும் கீழ்ப்பட்ட அந்தஸ்துள்ளவர்களிடம் நீபட்சமா யிருந்தால் நீ முன்னிலும் மேலான அந்தஸ்தை யடைவாய்.

நீ குரூரமுள்ளவனுக்வும் பிறருக்கு உபத்திரவம் செய்கிறவனு கவு மிருந்தால் நீ ஒரு அடிமையாகப் பிறப்பாய்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வஸ்துவிற்கும் நீ நன்மை செய்து விரோதத்தை அன்பாக மாற்றக்கடவாய். நாம் யாருக்குதவி செய்கிறோமோ அவர்களைக் கடைசியில் நேசிக்கிறோம். இதில் முயற்சி செய்; நீ விரும்பாத ஒருவருக்கு அல்லது ஒரு வஸ்துவிற்கு உதவி செய்யப் பிரயாசை யெடு; மேற்சொன்னசங்கதி நிஜமென்று உனக்கு சீக்கிரத்தில் ருசுவாகும்.

விரோதமானது சீதளமான துருப்பிடித்த இரும்புக்குச் சமானம். அன்பானது சுத்தமான தங்கம். பரார்த்த இரசவாதியாகவும் அதிலும் வெற்றியுள்ளவனுகவும் இருக்கக்கடவாய்.

முதலில் பலனை யுத்தேசித்து சரியான காரியங்களைச்செய்வாய். அது நல்ல ஆரம்பமல்ல. ஆனாலுமது ஆரம்பந்தான். வர வர நீ நல்லவனுகவே விருத்தியடைந்து இயற்கையாகவே நல்ல காரியங்களைச் செய்வாய். அப்பால் சுயநயம் பாராட்டாமையால் நேசமுள்ள சுத்தத் தங்கமாக உன் ஸ்வபாவம் மாறும். நீ உலகத்தாரிடம் சந்தோஷமா யிருப்பதுபோல அவர்களும் உன்னிடத்தில் சந்தோஷமாயிருப்பார்கள்.

உலகமானது ஒரு பெரிய கண்ணுடிக்குச் சமானம். அதில் நம்மையே நாம் பார்த்துக்கொள்கிறோம். நீ முகத்தை கோணவலித்தால் அதுவுமப்படியே பிரதிபிம்பிக்கும். நீ சிரித்தால் அதுவும் சிரிக்கும். ஆகையால் புத்திசாலியாகவும் சந்தோஷமுள்ளவனுகவுமிரு. முதலில் சந்தோஷமானது ஆழ்ந்ததா யில்லா விட்டாலும் காலக் கிரமத்தில் அது ஆழ்ந்ததாகும். சூரியப்பிரகாசம்போல் உனக்கு சந்தோஷத்தைப் பூர்த்தியாய்த் தரும்.

கீழான விஷயங்களையெல்லாம் அன்பும் ஆனந்தமுமாக மாற்றுகிற பரார்த்த இரசவாதிகளாக ஆகக் கடவீர்கள். இது செய்யக் கூடிய காரியம். அதைச் செய்வது உத்தமம். இப்போதே ஆரம்பியுங்கள்.

(இன்னும் வரும்.)

வி. வெங்குஸ்வாமி ஐயர்.

கல்வி கற்பித்தல் ஒரு கைங்கர்யம்.

முகவுரை.

இச்சிறு புத்தகத்தை எழுதினவர் முந்தின அநேகம் ஜன்மங்
களில், கல்வி கற்பித்தல் சம்பந்தமான காரியங்களில் அதிகமாக
உழைத்திருக்கிறார். ஆகையால் அதைப்பற்றிய பலமான ஒரு சிர
த்தையை அவர் இந்த ஜன்மத்திலும் அவருடன் கொண்டு வந்திரு
ப்பதாகத் தெரிகிறது. அவர் காசி க்ஷேத்திரத்திற்கு வந்திருந்த
காலத்தில் அவ்வூர் ஸெண்ட்ரல் இந்து கலாசாலையில் நடத்தப்பட்ட
ஒவ்வொரு காரியங்களையும் மிகுந்த ஊக்கத்துடன் கவனித்தார். அங்
கிருந்தவர்களுடன் அவைகளைப் பற்றிச் சம்பாஷித்து, மாணவர்க
ளுக்கும் உபாத்தியாயர்களுக்கும் உள்ள பரஸ்பர விசுவாசத்தைப்
பார்த்து, தெரிந்து கொண்டிருக்கிறார். அவைக ளெல்லாம் தன்னு
டைய ஸ்வதேசமாகிய தென் இந்தியாப் பிரதேசத்தில் தான் அடை
ந்த அனுபவத்திற்கு முற்றிலும் மாறாக விருந்தன. அவைகளைப்
பற்றி அவர் சிந்தித்துக் கொண்டிருந்து, இக்காலத்தில் ஏற்பட்டிரு
க்கும் வழக்கங்களைச் சீர்திருத்தி கல்வியை அபிவிருத்தி செய்வத
ற்கு இன்றியமையாததாகத் தோன்றின சில முக்கியமான விஷயங்
களை இச்சிறு புத்தகத்தில் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

உபாத்தியாயர் ஸ்தானத்தை வகிப்பது ஜனஸமூகத்தில் ஒரு
கௌரவமான அந்தஸ்தை வகிப்பதற்கு ஓர் அறிகுறி யென்று இந்
தியாவில் ஆதிகாலத்தில் நினைக்கப்பட்டு வந்தது. அந்த ஸ்தான
மானது அதே மாதிரி இப்போது அந்நிலைமைக்கே உயர்த்தப்பட
வேண்டும். கல்வி பயிற்றுவிக்கும் கைங்கரியமானது, உலோககுரு
வின் பாரம்பர்யத்திற்குச் சம்பந்தப்பட்டதென கௌரவமாகக் கரு
தப்பட வேண்டும். அன்றியும் உபாத்தியாயருக்கும் மாணவர்களு
க்கும் ஏற்பட வேண்டிய பற்றுதலானது பரமார்த்த ஞான குருவுக்
கும் பரமார்த்த சிஷ்யர்களுக்குமுள்ள பற்றுதலை யொத்ததாக விரு
க்கவேண்டும். அதாவது உபாத்தியாயர் மாணவர்களை ஆதரித்து
அவர்களை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவரும் அன்பையுடையவ

ராயிருக்க வேண்டும். சிஷ்யர்களுக்கு (மாணவர்களுக்கு) குருவினிடம் நம்பிக்கையும், விசுவாசமும், அன்பும் வேண்டும். இதுதான் இந்தியர்களின் ஆதி காலத்திய உண்மையான நோக்கம். ஆனால் இப்போதிருக்கும் நிலைமையைக் கவனிக்குமிடத்து இது உண்மையில்லாத ஒரு கட்டுரை என நினைக்கக் கூடும். ஆனால் இவ்வேற்பாட்டை எந்தத் தேசத்தில் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரக் கூடுமெனின் அது இந்தியாவில் இந்தியர்களால்தான் ஸாத்தியமாக செய்யக் கூடியது.

இப்புத்தக மெழுதினவர் மனதில், இனி ஏற்படப் போகிறதான ஒரு கல்லூரி (காலேஜ்) யையும், கலாசாலை (School) யையும் பற்றிய ஸ்வப்னம் போன்ற ஒரு எண்ணம் உதித்திருக்கிறது. அவைகளில் மேற் சொன்ன விஷயங்கள் அநுஷ்டானத்திற்கு கொண்டு வரப்படலாம். அது பிரஹ்மக்ஞான சங்கத்தைச் சார்ந்துள்ள கல்லூரியும் கலா சாலையுமாகும். உயிரிழந்த பழைய நல்ல வழக்கங்களெல்லாம் இப்போது பிரஹ்மக்ஞான சங்கத்தாலேயே உயிர் பெற்று வெளிக்கிளம்புகின்றன. ஏனெனில் இப்பிரஹ்மக்ஞான சங்கம் ஒன்றேதான் இந்தியர்களின் பழைய நாகரிகத்தின் ஸாரங்களை நிரப்ப, புதிய பாத்திரங்களை அமைக்க சக்தியுள்ளது.

தண்டனை என்பது கூடாது; பிரம்பாலடிப்பது மட்டுமல்ல, சிறுவர்களுக்குப் பயத்தை உண்டாக்கக் கூடிய எவ்வித வழக்கமும் நிறுத்தப்பட வேண்டும். ஏனெனில் அவைகள் சிறுவர்களை ஆண்மைத் தன்மை யுள்ளவர்களாகவும் கௌரவ முள்ளவர்களாகவும் செய்யாமல் அவர்களைக் கபடமுள்ளவர்களாகச் செய்து விடும். உபாத்தியாயரிடம் எல்லா நற்குணங்களுஞ் சிறந்து விளங்க வேண்டும். அன்பாலும், வியப்பாலும், உபாத்தியாயரிடமுள்ள நற்குணங்களைப் பையன்கள் தாங்களும் பழக ஆரம்பித்து அந்தப்படி நடக்க வேண்டும். கெட்டவழியில் பழக்கப்படாத குழந்தைகளுக்கு நல்ல விஷயங்களைப் போதிக்க ஆரம்பித்தால் அவர்கள் அவ்விஷயங்களை எவ்வளவு சீக்கிரமாகக் கைப்பற்றுகிறார்களென்பதை அறிந்திருப்பவர்கள், சிறுவர்களுக்கு பயத்தை உண்டாக்காமலே அவர்களிடம் அன்பு பாராட்டி தன்னுடைய நடத்தையாகிய மேலான உதாரணத்தைக் காட்டி, அவர்களுக்கு உற்சாகத்தை உண்டுபண்ணும்,

உபாத்தியாயரின் சாமர்த்தியம் எவ்வளவு கிடமுள்ளதாக விருக்க வேண்டுமென்று அறிவார்கள். ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி கூறுகிறபடி உபாத்தியாயரிட மிருக்கும் ஆத்மாவும் மாணாக்கர்களிடமிருக்கும் ஆத்மாவும் ஒன்றே தவிர வேறில்லை. ஈசுவரனுடைய அம்சமாகிய அந்த ஜீவாத்மாவுக்குச் சாத்தியமாகாதது ஒன்றுமில்லை. சிறுவர்களை, அவர்கள் மனம் எந்த சாஸ்திரத்தைக் கற்பதில் ஆவலோடு செல்லுகிறதோ அச்சாஸ்திரத்தையே பயிலும்படி விடவேண்டும். அவ்வித மன்றி விசாலமான புத்தியுள்ள சிறுவர்களைச் சாதாரண விஷயங்களைக் கற்கும்படி கட்டாயப்படுத்துவதும் விசால அறிவு இல்லாத சிறுவர்களை அரிய விஷயங்களைக் கற்கும்படி வற்புறுத்துவதும் பிசகு. அவ்விதம் செய்வதானது புரோகிரஸ்ட் (Procruste) என்பவர் தன் படுக்கையில் படுத்துக் கொண்டவர்கள் அப்படுக்கையை விட நீளமாக விருந்தால் அவர்களின் அவயவங்களை வெட்டிக் குறைத்தும், படுக்கையின் அளவுக்கு குறைவாகவிருந்தால் அவர்கள் அவயவங்களைப் பிடித்திழுத்து நீட்டியும், துன்பம் செய்தது போலாகும். குழந்தைகளின் திராணியையும் அவர்கள் மனம் எந்த மார்க்கத்தில் செல்லுகிற தென்பதையும் நன்குணர்ந்து அதற்குத் தக்கபடி கல்வியைப் புகட்டவேண்டும். மொத்தத்தில் குழந்தைகளின் திராணியையும் நோக்கத்தையும்பற்றிய கவலை மிகுதியாக விருக்க வேண்டும். கல்வி கற்பித்தலாகிய கைங்கரியத்திற்காக ஏற்பட்டிருப்பவரே உண்மையான உபாத்தியாயர்.

பள்ளிக்கூடமானது உத்தமமானதும் சந்தோஷத்தைக் கொடுக்கத் தக்கதுமான சக்திகள் நிறைந்த ஓர் இடமாகவும், அச்சக்திகளெல்லாம் அவ்விடத்திலிருந்து சுற்றுப்பக்கங்களில் பரவும்படிக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும். சிறுவர்களுக்குக் கொடுக்கும் கல்விப் பயிற்சியும், தேகப்பயிற்சியும், அவர்கள் நடத்தைகளைச் சீர்ப்படுத்துவதற்கும், அவர்களைத் தேசாபிமான முள்ளவர்களாகச் செய்வதற்கும், நல்ல நகரவாசிகளாகச் செய்வதற்கும் யோக்கிய முள்ளனவாக விருக்க வேண்டும்.

இவ்விதமாக அவ்வாலிபர் கனவு காண்கிறார். அவர் ஒரு போதகாசிரியர் ஸ்தானத்தை அடையப் போகிறார். இனி வருங்காலங்களில் இது சாத்தியமாகலாம்.

பால்யத்தில் அவர் மனதில் ஏற்பட்ட இவ்வெண்ணங்கள் அவர் தக்க வயதையும் வல்லமையையும் அடையுங்காலத்தில் காரியமாகச் சித்திக்கக் கடவதென்றும், பாலைவனம் போன்ற இப்புவியின் பிரதேசங்கள் அவருடைய சக்தியால் நந்தவனம்போல புஷ்பித்து ஆனந்தத்தைக் கொடுக்கக் கடவதென்றும் நாம் வேண்டுகிறோம்.

அன்னிபெஸண்ட்.

கல்வி கற்பித்தல் ஒரு கைங்கர்யம்.

நூன்முகம்.

இச்சிறு புத்தகத்தில் குறிப்பிடப்பட்ட விஷயங்களில் அநேகம் நான் பள்ளிக்கூடத்தில் முதலில் கல்வி கற்ற காலங்களின் ஞாபகத்திலிருந்து எழுதப்பட்டவைகள். என் ஞான குருவுக்கு நான் சிஷ்யனாக அமைந்தபொழுது அவர் என்னை நடத்திய ஒழுங்கை நன்றாக அறிந்திருக்கிறேன். அதனால் சிறுவர்கள் இப்போது சுபாவமாக அடைந்திருப்பதைக் காட்டிலும் அவர்களின் வாழ்நாட்கள் இன்னம் அதிக சந்தோஷகரமானதாகச் செய்யப்படலாமென்று எனக்குத் தோன்றுகிறது. கல்வி கற்பிக்கும் விஷயத்தில் நன்மையைப் பயக்கும் மார்க்கத்தையும், தீமையைப் பயக்கும் மார்க்கத்தையும், நானே அனுபவித்தறிந்திருப்பதால் மற்றவர்களும் நன்மையைப் பயக்கும் மார்க்கத்தையே அனுஸரிக்கும் பொருட்டு அவர்களுக்கு உதவி புரிய விரும்புகிறேன். இந்த விஷயம் என் ஞானகுருவுக்கு அத்யந்த பிரியமானது. இதில் எழுதும் விஷயங்களெல்லாம் அவர் எனக்குபதேசித்த விஷயங்களேயன்றி வேறல்ல. அதனால் அவரிடமிருந்து நான் கேட்டதைப் பூராவும் திரும்பச் சொல்லச் சக்தியில்லாததால் என் சக்திக்குச் சாத்தியமான மட்டில் ஒருவாறு கூறி இருக்கிறேன். மிஸ்டர் ஜி. எஸ் அருண்டேல் (Mr. G. S. Arundale) என்பவராலும் திடசித்தமும் பரோபகார சிந்தனையுமுள்ள அவருடைய கூட்டத்தாராலும் காசி, ஸெண்ட்ரல் இந்துகலாசாலையில் செய்துவரப்பட்ட வேலைகளின் பெரும்பான்மையை சென்ற இரண்டு வருஷகாலமாக நான் பார்த்திருக்கிறேன். மாணாக்கர்களைத் தங்களுடைய இளைய சகோதரரென்று நினைத்து அவர்களுக்கு உதவி புரியும்பொருட்டுத் தம் காலத்தையும் வல்லமையையும் சந்தோஷத்துடன் கழிக்கும் உபாத்தியாயர்களையும் கவனித்திருக்கிறேன். ஒருபோதும் சாத்தியமென்று நான் நினைத்திராதபடி பையன்களும் அவ்வளவு மரியாதையுள்ளவர்களாயும், பக்தியுள்ளவர்களாயும், நன்றியறிதலுள்ளவர்களாயுமிருப்பதையும் கவனித்திருக்கிறேன். இதில் சொல்லப்பட்ட விஷயங்கள் சாதாரணப் பள்ளிக்கூடங்களில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரக்கூடியவைகளல்லவென்றும் சாதாரண உபாத்தியாயர்களுக்கு சாத்தியமான

வைகளல்லவென்றும் அநேகர் நினைக்கலாம். அப்படி இருந்த போதிலும் இப்புத்தகத்தில் கண்ட விஷயங்கள் பெரும்பாலும் உண்மையில் அனுபவத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப்பதை நான் நேரில் பார்த்திருக்கும் ஒரு கலாசாலையை உங்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடும். அவ்விஷயங்களிற் சிற்சிலவற்றைத் தற்காலப் பள்ளிக்கூடங்கள் அநேகத்தில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவது அசாத்தியமாக விருக்கலாம். ஆனால் உபாத்தியாயர்கள் அவைகளின் அவசியத்தை நன்றாக யோசித்துத் தங்களுடைய ஸ்தானத்தின் விசேஷம் இப்படிப்பட்டதென நன்றாகத் தெரிந்து கொள்வார்களாயின், அவ்விஷயங்களை ஒத்துக்கொள்வார்கள். அன்றியும் அவ்விஷயங்களை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரக்கூடும். இதில் சொல்லப்படும் விஷயங்கள் பெரும்பான்மையும் எல்லாத்தேசத்திற்கும் எல்லாமதத்திற்கும் பொருந்தும். அன்றியும் ஜாதி, மதம், வம்சம், வர்ணம் முதலிய வேற்றுமைகளால் பாதிக்கப்படாமல் எல்லோருக்கும் பொதுவாயுள்ள சகோதரபாவத்தை விருத்திசெய்யுமென்றும் நினைக்கிறேன். பள்ளிக்கூடங்களில் ஒரு ஜீவனுக்கும் மற்றொருஞ் ஜீவனுக்குமுள்ள ஒற்றுமையும் இஜ்ஜீவர்களுக்கு விகாஸமுறையில் ஏற்படும் ஒரே நோக்கமும் சிறுவர்களுக்கு இளமையிலேயே நன்றாகப் போதிக்கப்படுமாயின் அதனால் இனிவருங்காலங்களில் ஏற்படக்கூடிய நன்மைகளை எவ்வளவு சந்தோஷத்துடன் நாம் எதிர்பார்க்கலாம்? தங்கள் ஜாதியே உயர்ந்ததெனவும் மற்றவர்கள் தாழ்ந்தவர்களெனவும்நினையாவண்ணம் சிறுவர்களுக்குப்போதிக்கவேண்டும். அன்றியும் உலகத்திலுள்ள எல்லா மாணவர்களும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் என்பதையும் அவர்கள் ஒருவருக்கொருவர் அன்பும் அனுதாபமுமுள்ளவர்களா யிருத்தல் வேண்டும் என்பதையும் போதிக்கவேண்டும். இப்படிச் செய்தால் ஜாதியாருள்ளும் தேசத்தாருள்ளும் ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையானது முற்றிலும் மாறிவிடும். சுதேசாபிமானம் சிறுவர்களிடத்திலுண்டாவது மிகவும்அழகான குணமே. ஏனெனில் அது சுயநலம் கருதாக்காரியங்களை அவர்கள்செய்வதற்கும் உயர்வானவிஷயங்களில் அவர்கள் தங்கள் ஊக்கங்களைச் செலுத்துவதற்கும் காரணமாகவேற்படும். ஆனால் அன்னியதேசத்தாரை வெறுத்துத் தன் தேசத்தினிட

மட்டும் அபிமானம் பாராட்டுவது பிசகான காரியம். அது உண்மையான தேசாபிமானமன்று. சுதேசாபிமானத்தையும் சுதேசத்திற்காகப் பாடுபடுவதற்கு இச்சையையும் சிறுவர்களுக்கு உண்டாக்கும் பொருட்டு உலகத்திலுள்ள பலதேசத்தாருள்ளும் அநேகவிதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றனவென்பதாக நான் கேள்விப்படுகிறேன். அது உண்மையில் நல்லதுதான்; ஆனல் பொதுவான உயர் நோக்கங்களையும், நல்ல காரியங்களைச் செய்வதற்கு ஆதாரமாயுள்ள மனிதர்களின் சகோதர பாவம் என்ற தத்துவத்தின் ஞானத்தையும் எல்லாத் தேசத்துச் சிறுவர்களுக்கும் போதிக்க சர்வதேச சம்பந்தமான கட்டுப்பாடுகள் எக்காலத்தில் ஏற்படுமோவென்பதை நினைக்கும்பொழுது என்மனம் வியப்படைகிறது. நான் இச்சிறு புத்தகத்தை யெழுதும் காலத்தில் மாது ஸ்ரீ அன்னி பெசன்ட் அம்மையாராகிய என் அன்புள்ள தாய் எனக்குச்செய்த ஒத்தாசைக்காக அவர்களுக்கு நான் வந்தனமளிக்க விரும்புகிறேன். அன்றியும் எனது பிரியமுள்ள சிநேகிதர் மிஸ்டர் அருண்டேல் (Mr. Arundale) என்பவரிடம் நான் அடிக்கடி சம்பாஷித்த காலங்களில் அவர் எனக்குக்குறிப்பிட்டுச் சொல்லிய விஷயங்களுக்காக அவருக்கும் வந்தனமளிக்க விரும்புகிறேன்.

கிருஷ்ணமூர்த்தி.

நன்மொழி.

நாம் விதியின் வசம் அகப்பட்டுத் துன்புறும்போது, ஞானம் ஆகிய கண் இழந்த குருடராகின்றோம்.

நீ இயல்பாகவே விழிப்புள்ளவனாயிரு, இல்லாவிடில் விதியானது எப்படியும் உன்னை விழிப்புள்ளவனா யிருக்கச்செய்யும். அதாவது அஜாக்ரதையின் பயனாக நீ மிகுந்த துன்பத்திற்காளாகி பிறகு எப்படியும் ஜாக்கிரதையாயிருத்தல் வேண்டுமென்ற உறுதியான தீர்மானத்துக்கு வருவாய். துன்பப்பட்டுப் பிறகு தேர்ச்சியடைவதைவிட இயல்பாகவே ஜாக்கிரதையாயிரு.

ஒரு புதிய கொள்கை. *

சமீபகாலத்தில் ஒரு பரமாசாரியர் உலகத்தில் தோன்றுவார் என்னும் பிரஸ்தாபம் இப்போது எங்கே பார்த்தாலும் பரவி வருகிறது. அவர் வருகை சரியானபடி வரவேற்கப் பெறும் பொருட்டு நாம் செய்யவேண்டிய பிரயத்நமாவது: நம்முடையவும் நம் சிநேகிதர் அபலார்களுடையவும் மநங்களில் பக்தி, ஸ்தைர்யம், (மன உறுதி) சாந்தம் (Devotion, Steadfastness and Gentleness) என்னும் இம்முக்குணங்களையும் பிரதான அம்சங்களாக அமைப்பித்து அதன் மூலமாய் உலகத்தோர், மேற்கூறிய முக்குணங்களுமே உருவெடுத்துத் தோன்றப்போகும் பரமாசாரியனின் கிருபைக்குப் பாத்திரமாகும்படி செய்யவேண்டுவதேயாம். இதில் முதன்மையாக, நம்முடைய அநுஷ்டானத்தில், அதாவது நம்முடைய சரியையில் இம்முக்குணங்களையும் கைக்கொள்ளாவிடில், பிறரைச் சீர்ப்படுத்த வேண்டி எவ்வளவு போதித்தாலும், அது பயனற்றதாகும். ஆகவே நாம் எவ்வாறு முயலவேண்டுமெனப் பார்ப்போம்.

இம் முயற்சியில், புதிதாக ஏதேனும் செய்ய ஆரம்பிக்குமுன், நாமே புதியவர்களாக வேண்டுதவசியம். நம்முடைய செய்கையைக் கவனிக்குமுன், நம்முடைய கருத்தையும் நோக்கத்தையும் கவனிக்கவேண்டும். நம்மைச் சுற்றுமுள்ள உலகத்தை, ஒரு புதிய கொள்கையை முன் வைத்து, அந்த ஸ்தானத்தினின்று பார்த்தறிவோம். அப் புதியகொள்கையை எங்கேனும் தேடிப்பிடிக்க வேண்டிய சிரமம் கிடையாது. அல்லது இதுவரையிலும் நாம் கேட்டிராத அப்பியாசச் சிரமத்தால் மிகுந்த சிரமஸாத்தியமானது என்பதும் கிடையாது. ஆனல் பின் எப்படித்தான் அக்கொள்கையை நாடுவது? நம்மிடத்தில் இயற்கையாகவே அமைந்துள்ள அன்பு, விவேகம் இரண்டையும் வெகு ஸாதாரணமாய் நம் பழக்கத்திற் கொண்டுவருதலால்தான் இப்புதிய கொள்கை பெறப்படுகிறது.

இவ்விரண்டு ஸத்குணங்களையும், வீண்பேச்சோடு மட்டும் நிறுத்தாமல், உண்மையாகவே நம் சீலத்திலமையப்பெற்று நாம் பழக்கத்திற்குக் கொண்டுவருவோமானல் அது உலகத்திற்கெவ்வாறு

---

* Translation of "New Attitude" by C. W. L. in the Herald of the Star.

பயன்படும்? உலகில் யுத்தங்களும் சண்டை சச்சரவுகளும் நிகழா. பலவகை வியாபாரங்கள் சம்பந்தமாக போட்டியும் பொறாமையுமற்று ஸமாதானமே பரவுமன்றோ! நம் குடும்பங்களுக்குள்ளும் அயலார்களுக்குள்ளும் மநஸ்தாபங்கள் நேர இடந்தான் ஏது? ஸாமான்ய விவேகத்தாலும் அன்பென்னும் குணத்தாலும் இவ்வித உபத்திரவங்களை நீக்குதல் இலகுவாம். இவ்வுண்மைக்கு ஸாக்ஷ்யம் வேண்டியதில்லை, ருசுவேண்டியதில்லை. இது யாவருக்கும் தெளிவாய்ப் புலப்படக்கூடிய உண்மையே. மேற்சொல்லிய விதமாய் உலகத்தின் துன்பம் துடைக்கப்பட்டு, மிக்க மேன்மை பொருந்தியதாகும் இவ்வுலகம். இம்மேன்மைகளைப் பற்றி விசாரிப்பதற்கு வேண்டிய இடமுண்டு. ஆனால் அன்பினாலும் விவேகத்தாலும் உலகின் துன்பங்கள் நீங்குமோ என்று சந்தேகிக்கமட்டும் அற்பமேனும் இடமில்லை. ஆயினும் உலகினர் தற்கால நிலையில் இவ்வொழுக்கங்களைக் கைக்கொள்ள முயலுவதேயில்லை. நாம் ஒவ்வொருவரும் தத்தம் வாழ்நாளில் இவ்வொழுக்கங்களை அநுஷ்டித்து வருவதால் நம் அயலார்களிடத்து எத்தகைய அபிப்பிராயம் அல்லது கொள்கையைப் பெறுகிறோம் என்று விசாரிப்போம்.

நாம் பிறரிடத்துக் கொள்ளும் மதிப்பானது, இப்போதைப் போல் த்வேஷ புத்தி இல்லாமல், ஸ்நேஹபாவமாகவே யிருக்கும். தற்காலத்தில் ஸாதாரணமாக, ஜனங்கள், அன்புபாராட்டுதல் என்றால், நண்பர்களிடத்து கேலியும் பரிஹாசமுமாக நடத்தல் என்று தவறான அர்த்தங்கொண்டு அவ்விதமே நடக்கிறார்கள். ஒருவர் மற்றொருவரைப்பற்றிப் பேசும் வம்பு வரம்பு கடந்ததாயிருக்கிறது. நம்முடைய வீடுகளில் பெண்கள் கூடிப்பேசும் வம்பர் மஹாஸபையையும், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் பேசும் அநாவசியமான பேச்சுகளையும், கோவில் பொற்றாமரை, கிளப்புகள் இவ்விடங்களில் நடக்கும் வீண்பேச்சுகளையும் சற்றுக் கவனியுங்கள். அவை நல்லெண்ணங்களையா பரப்புகின்றன? தீய சொற்கள்தான் நம் காதில் விழுகின்றன. தீய எண்ணங்கள்தான் நம்மனத்தைத் தாக்குகின்றன. இவ்வித வம்புகள் கொஞ்சமேனும் ஸ்நேஹபாவம் பற்றி நிகழ்கின்றனவென்று சொல்லத் தகுமா? வம்பு பேசுதல் தீய குற்றமேயாகும். அதனால் விளையும் தீமைக்குக் கணக்கு வழக்கில்லை. அது

தியது மாத்திரமல்ல, அநாகரிகமாகவும் இருக்கிறது. சற்று நாகரிகமுள்ளவர்கள். அவ்விதவம்பைக் கேட்கக்கூசுவார்கள். உயர்ந்த நாகரிகமுள்ளவர்கள் பிறர் விஷயங்களில் பிரவேசித்து உற்றுப் பார்த்தல் உற்றுக் கேட்டல் (Curiosity) முதலியவைகளையும் கூட வெறுப்பார்கள். இதற்கு திருஷ்டாந்தமாக, ப்ளேடோ என்னும் தத்துவஞானி தியோநிஸியஸ் என்ற கொடுங்கோன் மன்னனுக்குரைத்த பிரதியுத்தரம் இங்கு கவனிக்கத் தக்கது. தியோநிஸியஸ் அத் தத்துவ ஞானியை குரூரமாய் நடத்தி வந்தான். ஒரு நாள் தியோநிஸியஸ்:

"நீரும் உமது நண்பர்களும் வீட்டுக்குப் போன பிற்பாடு என்னைப் பற்றி ஏன் தூஷிக்கிறீர்கள்.?" என்று வினவலானன்.

பிளேடோ "ஸம்பாஷித்தற்குரிய விஷயங்கள் எமக்கில்லாமற் போனலன்றோ? வீட்டில் உம்மைப்பற்றி தூஷிப்பதற்கு" என்றார்.

நம்முடன் ஸம்பந்த முற்றிருந்தாலல்லாது பிறர் செய்கையில் நாம் ஏன் பிரவேசிக்க வேண்டும்? மெலியாரை ஹிம்ஸிக்கும் துஷ்டர்களை நாம் கண்டிக்க வேண்டிய தவசியம். மற்றவிதமாயிருந்தால் நாமேன் பிறர் காரியங்களில் நுழையவேண்டும்? ஈசுவரன் நம்மைப் பிறர் காரியங்களில் தவறு கண்டு பிடித்து, அவரது செய்கைகளை நிதானிக்கும் பொருட்டு ஸ்ருஷ்டித்தவனல்லன். நீ மட்டும் ஸ்வேச்சையாக இருக்க வேண்டு மென்று விரும்புகிறாயே? நம் ஸஹோதரர்களான பிறரையும் அப்படி யல்லவோ பாவிக்க வேண்டும். "ஒருவரையும் பொல்லாங்கு பேசவேண்டாம்" என்னும் ஔவை மூதாட்டியின் வசனத்தை நாம் ஒவ்வொருவரும் சிந்திக்கற்பாலர். பிறர் செய்கைகளில் தான் இவ்வாறு குற்றங் கண்டுபிடிக்கின்றார்களென்றால், பிறர் அபிப்பிராயங்கள் சம்பந்தமாகவும், துவேஷங் கொள்ளுதலும் தன் அபிப்பிராயத்தை மட்டும் சிலாக்கியமாகக் கொள்ளுதலும் ஸஹஜமாக இருக்கின்றது. நம்முடைய அபிப்பிராயமே நமக்குப் பெரிதெனத் தோன்றுவது போலத் தானே, பிறருக்கும் அவரவர்களின் அபிப்பிராயம் அவரவர்களுக்குப் பெரிதாகத் தோன்றும்! ஆகையால் பிறரை ஏன் உன்பக்கத்திற்குச் சேர்த்துக் கொள்ள முயலுகிறாய்? "என் அபிப்பிராயம் சரியானது

பிறர் அபிப்பிராயம் தவறானது" என்று நீ விடையளிப்பாய். இது நியாயத்திற் கொவ்வாது. விவேகவாயிலாக உண்மை யறிந்த ஒருவரும் இதை அங்கீகரியார். ஒரு மதமாவது முற்றும் சரியாயிராவிடினும் அற்பமேனும் உண்மையை ஆதாரமாகக் கொண்டதாயிருக்கும். உன் புத்தி பரிபக்குவ நிலைக்கு ஏற்றதாயிருக்கும் உன் அபிப்பிராயமும் கருத்தும் உன்னைவிட அதிகமாகத் தாழ்ந்த, அல்லது பரிபக்குவம் அடைந்தவர்களுக்கு உன் கருத்து ஏற்காது. ஆகையால் இவ்விரகஸியத்தை யறிந்து தன் வழியிற் சென்றுகொண்டு பிறர் வழியில் பிரவேசியாம லிருத்தலே அப் புதிய கோள்கையை அப்பியஸித்தலாகும்.

ஆகையால் குற்றங்காணுதல் என்ற பிசாசை நம்மிடந் தங்கவொட்டாமல் விரட்டி, பிறரிடம் நலங்காணுதல் என்னும் குணத்தைக் கடைப்பிடித்தோமானால், பிறருக்கு ஏதேனும் உபகாரமே செய்து கொண்டிருக்க அவகாசங்கள் ஏற்படும். நம் அயலார் களங்கமற்றுச் செய்யும் காரியங்களில் தோஷங்களை நாம் ஆரோபித்து அவர்களைப் பழிக்காமல், ஆனால் அப்படிச் செய்வது தான் உலகத்தோருக்கு வழக்கம், அவர்களிடத்தில் நாம் நல்ல நோக்கத்தையே கொள்ளுவோம். நம்முடைய கார்யங்கள் குற்றமற்றனவா யிருக்கும்பொழுது, பிறர் நம்மிடம் தோஷங்களைக் கற்பித்தால் நாம் எவ்வளவு துன்புறுகிறோம்? இக்காலத்தில் பெரும்பான்மையான மனிதர்கள் ஸத்குணங்களே உள்ளவர்களாகவாவது, துர்க்குணங்களே உள்ளவர்களாகவாவது இல்லை. ஆனால் எவ்வாறெனின், ஒவ்வொருவரிடத்திலும் ஸத்குணங்கள் துர்க்குணங்கள் இரண்டும் கலந்து தான் அமைந்திருக்கின்றன பிறரிடம் நமக்கெவ்வளவு சீக்கிரம் குற்றங் கண்டுபிடிக்கத் தெரிகிறதோ, அவ்வளவு சீக்கிரம் அவர்களிடம் நலத்தை நாடினால், நம்முடைய வாழ்நாளிலேயே, முற்றும் வேறான ஒரு மாறுதல் ஏற்பட்டு விடுகின்றது. பிறரும், நாம் அவர்கள்பால் வைக்கும் மதிப்புக்குத் தக்கவாறு தம் நடத்தையைச் சீர்படுத்திக் கொள்வார்கள். "நீர் சொல்வதெல்லாம் சரியே. ஆயினும் எனக்கு அசௌகரியங்களும், தொந்தரைகளும் குடும்ப விஷயமான பிரவிர்த்திகள் பலவும் அதிகமாயிருப்பதால், ஸர்மார்க்கத்தை யநுஷ்டித்தல் கஷ்ட ஸாத்தியமாயிருக்கிறது" என்று சிலர்

சொல்லுவார்கள். அது வாஸ்தவந்தான். அதற்கென்ன செய்ய வேண்டியதென்றால், இவ்வுலக வாழ்க்கையை ஓர் புதிய நோக்கால் பார்த்தல் அவசியம். அதாவது பிரபஞ்ச வியற்கையை நன்கு ணர்ந்தவனாய், எப்பொழுதும் தன் அயலார்களிடத்து அன்புடன் கூடினவனாய் ஒருவன் இருப்பானாகில் அவன் தான் உலகின் தன்மையைப் புதிய நோக்காலறிந்தவன். சில சமயம் நீ செய்யும் காரியங்கள் அநுகூலமாகின்றன வல்லவென்று வைத்துக் கொள்வோம். அதற்காகக் கவலை கொள்வது வீணாகும். சென்றுபோன காரியங்களுக்காகக் கவலை கொள்வது அறிவீனமாகும். இனி, நடத்த வேண்டிய காரியங்களில் ஜாக்கிரதையாயிருத்தல் நலமாகும். "வருவன வெல்லாம் வருக, வாராததெலாம் ஒழிக" என்ற பாவனையுடனிருத்தல் வேண்டும்.

நம்முடைய மனோபாவத்திற்குத் தக்கபடிதான் உலக வியாபாரங்கள், அத்யந்த சிரமமாகவோ அல்லது வெகு இலகுவாகவோ உள்ளன. நாம் தைர்யமாக திடசித்தத்துடன் ஸம்ஸாரத்தின் போராட்டங்களை யெதிர்த்தோமானால், அவை புயற்காற்றில் பஞ்சு படும் பாடு படும். தன்னை மறந்து பரோபகார சிந்தனையையே கொண்ட ஒருவனுக் கெதிரே இவ்வுலகப் போராட்டங்கள், சூரியோதயத்திற்குமுன் பனிபோற் பறக்கும்.

நாம் அநுஸரிக்கவேண்டிய புதிய கொள்கை என்னவென்றால் ஸர்வபூதஹித கரனாயும், பரோபகாரத்திற்கு எப்போதும் ஸந்நத்தனாயும் இருப்பதோடு, அபிப்பிராய பேதங்களையும், பலருடைய வெவ்வேறான ஆசாரணைகளையும் பொறுமையுடன் பாராட்டி நமக்கு நேரும் ஸம்பவங்களால் சுகதுக்கங்களைக் கொள்ளாமல் இரண்டிலும் ஸமபாவனை பாராட்டி ஸந்துஷ்டி பெறுவதேயாம்.

இவ்வாறு உதய நக்ஷத்திர ஸங்கத்தார் ஒவ்வொருவரும் அநுஷ்டிப்பதால் தம்மையும் பிறரையும் "பரமர் வருந்தருணத்தில்" அவரது ஆக்ஞையையறிந்து அவருக்குக் கைங்கர்யம் புரியச் சித்தம் செய்துகொள்வோம். திருமூலநாயனார் கீழ்வரும் பாசுரத்தால் மநுஷ்ய ஸமூஹத்திற்காக வேண்டிய வுதவிகளைப் புரிதலே மஹேஸ்வர ஆராதநமாகும் என்று குறிப்பிக்கிறார்.

"நடமாடக் கோயி னம்பர்க்கொன் றீயிற்
படமாடக் கோயிற் பகவற்க தாமே"

B. S. R. சுப்பிரமணியன்.

*என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது?

மனிதர்கள் பிரஹ்மஞான சங்கத்தில் அங்கத்தினர்களாகச் சேர்வதற்குக்காரணங்கள் பல. சிலர் அச்சங்கத்தின் கொள்கைகளில் அநுதாபம் கொள்வதாலும் மற்றுஞ்சிலர் அதிற் சில விஷயங்களைத் தெரிந்துகொள்ளக்கூடுமென்று நினைப்பதாலும், வேறு சிலர் அச்சங்கத்தார் செய்துவரும் வேலைகளில் தாமும் சேர்ந்து உதவிபுரிய விரும்புவதாலும் சேர்கின்றனர். அவர்களின் எண்ணம் எவ்விதமாக விருந்தபோதிலும் அவர்கள் விகாஸமுறையின் ஒழுங்குகளைத்தெரிந்துகொண்டபொழுது, அவர்களுக்கு தானாகவே அதில் ஓர் உற்சாக முண்டாகின்றது. அபிவிருத்திக் கிரமத்தின் சாத்யத்தையும், அது மனதுக்கிசைந்த தாயிருக்கும் தன்மையையும் பார்த்து, அதை அடையக் கவலை கொள்கின்றனர். உலகம் எவ்வளவு வருத்தத்துடன் ஒத்தாசையை விரும்புகிறதென்பதைக் கேள்வியுற்று, உலக ரக்ஷணார்த்தமான கைங்கர்யங்களுக்குத் தங்களுடலையும் தத்தம் செய்து, அதற்காகப் பிரதிஷ்டித்துக்கொண்டு, உல்கத்தாரால் நன்றி பாராட்டப்படாததும், மிகவும் பெரிதானதுமான, வேலைகளைச் செய்து வரும், மகான்களின் கூட்டத்தில் தாமும் சேர்ந்து கொள்வதற்கு விரும்புகின்றனர். நன்றிபாராட்டப்படாதது என்று ஏன் சொல்லவேண்டும் எனில், உலகத்தில் தீர்க்கதரிசிகள் அவதாரம் செய்து உலகத்திற்கு நன்மையைச் செய்யும்போது அவர்களைக் கல்லால் அடித்துத் துன்பப்படுத்துவதும் அவர்கள் இவ்வுலகத்தை விட்டுப் போனபிறகு அவர்களுக்குக், கோவில் கட்டிவைத்து அவர்களைத் தெய்வங்களாகத் தொழுவதும் உலகத்தாருக்கு வழக்கமாக விருக்கிறது. அவர்கள் உயிருடனிருக்கும்போது படும் கஷ்டம், இனிவருங் காலங்களில் தமக்குக்கோயிலும் சமாதியும் ஏற்படப் போகிறதென்னும் முன் நோக்கத்தால், குறைவுபடுகிறதில்லை.

இவ்விதம் பிரஹ்மஞானசபையில் அங்கத்தினர்களாகச் சேர்ந்தவர்கள் தங்களுடைய விகாஸமுறையைத் துரிதப்படுத்த நிச்சயித்துக்கொண்டபோது, அதைச்செய்யும் வழியையும் அவ்வழியைப் போதிப்பவர்களையும், அதற்கு ஒத்தாசை செய்பவர்களையும்பற்றி

---

* Translation of "Why not I" by C. W. L.

விசாரிக்கிறார்கள். அப்படி விசாரிக்கையில், சித்தர்களாயுள்ள மகான்களின் கூட்டமொன்று இருக்கிறதென்பதையும், அம்மகான்களிற் சிலர், சில சமயங்களில் அப்பியாசிகளை (apprentices) ஏற்றுக்கொண்டு மேற் செய்யப்படவேண்டிய வேலைகளுக்காக அவர்களைப் பழக்குகிறார்களென்பதையும், தமக்கு முன்னமேயே அச்சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்திருப்பவர்களிடமிருந்து தெரிந்துகொள்ளுகிறார்கள். இவ்விஷயங்களை அவர்கள் சொல்லும்பொழுது, ஒருவன் அதுதான் தான்விரும்புவதென வுணர்ந்து, உடனே தன்னையும் ஒரு அப்பியாசியாகச் சேர்த்துக்கொள்ளும்படி அர்ப்பணம் செய்கிறான். அப்போது அவர்கள் அவனை யேற்றுக்கொள்வதற்கான உத்தரவு அம்மஹான்களிடமிருந்து பிறக்கவேண்டு மென்றும், ஆனால் அவர்களிடமிருந்து அவ்வித உத்தரவு பிறக்கும்வரை அவன் செய்யவேண்டிய தென்னவெனில், அந்நிலையை யடைவதற்குத் தன்னைப் பாத்திரனாகச் செய்துகொள்வதே என்றும் சொல்லுகிறார்கள்.

மேலும் அவர்கள் (குருநாதர்கள்) தன்னைத் தேர்ந்தெடுப்பதற்காகத் தன்னைத் தான் சீர்திருத்திக் கொள்ளும் மார்க்கத்தைப்பற்றி விசாரிக்கும்பொழுது அதைப்பற்றி இரகசியமொன்றுமில்லை யென்றும், அச்சாதனங்களெல்லாம் முன்னோர்களுடைய சாஸ்திரங்களில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன வென்றும் தெரிவிக்கப்படுகிறான். அவைகளைத் தெரிந்துகொள்வது சுலபம்; ஆனால் அச்சாதனங்களை அடைவது கஷ்டம். தற்கால வாழ்நாட்களில் ஏற்பட்டிருக்கும் பழக்கங்களில் அவைகள் அநுஷ்டானத்திலிருப்பனவாகக் காணப்படவில்லை. ஆயினும் அவைகளெல்லாம்கையாளப்பட்டு வந்த சரித்திரங்கள் நமக்கு உறுதி கூறுகின்றன. உற்று நோக்குமிடத்து இப்போதுள்ள நிலைமையைப் போன்ற காலங்களில் அவைகள் ஒரு போதும் பகிரங்கமாக அநுஷ்டிக்கப்படவில்லை யென்று தெரிகிறது. பண்டைக்காலங்களில் ஞானமார்க்கத்தில் உறுதியாக நடக்கத் தீர்மானித்த ஒருவன் மனித சஞ்சாரமில்லாத இடங்களிலும் குகைகளிலும் சென்று அனைப்பழகுவது வழக்கம். தன்னைப்போன்ற மனிதர்களின் மத்தியில் அவன் இருக்கும்வரை யோக்கியமான வழியில் நடப்பவனாகவும் பிரவிர்த்தி மார்க்கத்தில் உள்ளவனாகவும் இல்லை

றத்தானெனவும் ஆனால் ஞானமார்க்கத்தைக் கைக்கொண்டொழுகுபவன் அல்லனெனவும் கருதப்பட்டான். மற்றவர்களுக்கும் இதைச் சாத்தியமாகச் செய்யவும், முற்றிலும் அம்மார்க்கத்திலேயே நடப்பவர்களுக்கு வேண்டிய உதவிகளைப்புரியவும் அவன் இம்மேலான மார்க்கத்தை ஆதரித்துவந்தான்.

குகையில் வசிக்கும் தபஸ்வியும், நிலவறையில் சஞ்சாரிக்கும் துறவியும் (monk) உலகவின்பங்களை விட்டவர்கள் என்பதிற் சந்தேகமில்லை; ஆனால் அவர்கள் செய்யப்புகுந்திருக்கும் காரியத்திற்கு மிகவும் உரித்தானதாயும் வியக்கத்தக்கதாயு மிருக்கும் நிலைமைகளைத் தங்களுக் கேற்படுத்திக் கொள்ளுகின்றனர். தம் உடனொத்த சிருஷ்டி வருக்கத்தவராகிய வேறு மனிதரைப் பார்ப்பதில்லை; தமக் கேற்பட்ட பொறுப்புகளையெல்லாம் விட்டொழித்தவர்கள்; தமக்குக் கோபத்தை யாவது, கிலேசத்தைபாவது உண்டுபண்ணுவதற்கு யாதொன்றுமில்லை. அவ்வித நிலைமை ஒருவித சுபாவமுள்ள சிலருக்குத் தான் சாத்தியமானது; அதனால் ஏண்டாகும் பந்த நிவிர்த்தியைக் குறித்து அது அவர்கள் நோக்கத்திற்கு ஒத்ததாகவிருக்கிறது. பிரஹ்மஞ்ஞானசங்கத்தைச்சேர்ந்த ஒருவன் தன்னை அபிவிருத்தி செய்து கொள்ள அம்மார்க்கத்தை ஆசரிக்கும்படி சொல்லப்படுவதில்லை. உலகத்திலுள்ள மனிதர்களுடன் சேர்ந்து வசித்து அவர்களுக்கு ஒத்தாசை செய்யப் பழகும் போதே அவன் அச்சாதனங்களைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். வாழ்நாட்குரியஜீவனுபாயங்களை அவனடைய வேண்டும்; அந்நிலைமையில் அவன் பல மனிதர்களை அடிக்கடி சந்திப்பதால் அவர்களிற் சிலர் சந்தோஷமுள்ளவர்களாகவும் சிலர் கோபமுள்ளவராகவுமிருக்கிறனர். அவர்களுடைய சலன சக்திகள் அவனுக்கு விரோதமாயும் மிருந்த தடையை உண்டுபண்ணுபவைகளாயு மிருக்கின்றன. இந்நிலைமையில் பற்றுக்களை முற்றிலும் விட்டவனைப் போல் ஞான மார்க்கத்தில் அவன் அதிகமான தேர்ச்சியை யடையமுடியாது. ஆனால் இந்நிலைமையிலிருந்து கொண்டே சிற்சில விஷயங்களில் துறவியையும் விட அதிகமான நன்மைகளைச்செய்யக்கூடும். உலக வாழ்க்கையிலிருந்து கொண்டே உலக விஷயங்களிற் பற்றில்லாமலிருக்கலா மென்பதைத் தன் வாழ்நாட்களில் தானே நடந்து காட்டக் கூடும்.

தன்னையும் குருநாதன் ஒரு அப்பியாஸியாக ஏற்றுக்கொண்டு தனக்கும் ஞானத்தைப் போதிக்கவேண்டுமென்று இச்சிக்கும் ஒவ்வொருவனும் குருநாதனுடைய விருப்பமின்னதென்றும், ஒருவனை அப்பியாஸியாக அவர் ஏற்றுக்கொள்வதற்கு அவ் விஷயம் எவ்விதமாய் அவருக்குத் தானாகவே உணர்த்தப்பட வேண்டுமென்பதையும் நன்றாகத் தெரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். தேகபலத்தின் அளவைப் போலவே ஒவ்வொருவருக்கு மேற்பட்டிருக்கும் ஆத்ம சக்திக்கும் ஓரளவுண்டு. அநேகருக்கு அவ்வித சக்தி தம்மிட மிருக்கிற தென்பதே தெரியாமல் அதை மலினமடையும்படிக்கும், சேதமடையும்படிக்கும் விட்டிருக்கிறார்கள். குருநாதன் தன்னுடைய ஆத்ம சக்தி இவ்வளவென்பதை நன்றா யறிவார். அன்றியும் அச் சக்தியினுடைய சிறு பாகத்தையும் உலகத்தாருக்கு மிகுந்த நன்மையைப் பயக்கும் காரியங்களிற் செலவழிப்பதே தன் கடமை யெனக் கொண்டிருக்கிறார். ஒருவனை அப்பியாஸியாக ஏற்றுக்கொள்வாரா மாட்டாரா வென்பதைத்தீர்மானிப்பதற்கு முகாந்திரம் இது (சக்தியை வீணாக்காமல் நல்ல வழியிற் செலவழித்தல்) ஒன்றே தான். அவ்விஷயத்தில் (ஏற்றுக் கொள்ளும் விஷயத்தில்) தயவென்ப தொன்றுமில்லை. சிபார்சுக்காவது அல்லது முன் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற வனுக்கு மகனா யிருத்தலினாலாவது அவர் ஒருவனை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. ஆனால் சிலர் "நான் குறைகளை யுடையவ னென்பது எனக்கு நன்றாகத் தெரியும், அப்படியிருந்த போதிலும் நான் போதிக்கப்படவும் ஒத்தாசை செய்யப்படவும் வேண்டுமென விரும்புகிறேன். "என் குருநாதன் எங்களை (என்னைப் போன்றவர்களை) யெல்லா மேற்றுக் கொண்டு எங்களுக்குக் கற்பிக்கக் கூடாது"? என நினைக்கிறார்கள். இவ்விதம் நினைப்பது நியாயமன்று; ஏனெனில், இவ்விதமுள்ள ஒருவனை அப்பியாஸியாக வேற்றுக் கொண்டு அவனைச் சீர்திருத்தும் விஷயத்தில் தன் சக்திகளைச் செலவழிப்பதைக் குருநாதன் இலாபகரமாக வெண்ணமாட்டார். புதிதாகச் சேர்ந்திருக்கும் அப்படிப்பட்ட வொருவனுக்கு முன்னமேயே அங்கத்தினராகச் சேர்ந்து பழகிவரும் யாராவதொருவர் இவ்விஷயங்களைக் கற்பித்தல் கூடும். (இன்னும் வரும்.)

ஆத்தங்குடி M. ஸ்வாமிநாதையர்.

புத்தக வரவு

ஸ்ரீ சுப்பிரமண்ய பஜனை:—பஜனை நாமாவளிகளும், 35 திவ்விய க்ஷேத்திரங்களின் திருப்புகழும் அடங்கியுள்ளது. இப்புஸ்தகம் வேண்டுவோர் "வ. எஸ். விசுவநாதையர், நெ. 7. தணிகாசலப்பிள்ளைதெரு, திருவல்லிக்கேணி, சென்னை." என்ற விலாசத்திற்கு 1 அணா ஸ்டாம்பு தபாற்செலவு முதலியவற்றிற்காக அனுப்பி இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

B. S. R. சுப்பிரமணியன்.

சமாசாரம்.

மதுரையில் இருக்கும் மீனாக்ஷி வித்தியாசாலை என்னும் பெண் பிள்ளைகள் பள்ளிக்கூடத்துக்கு மிஸ்பார்ஸன்ஸ் என்னும் அம்மாள் தலைமை உபாத்தியாயராக (Head mistress) வேலை செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பிரஹ்மஞானசபையில் மிகவும்சிரத்தையுள்ள ஒரு அங்கத்தினர் என்பதும் தவிர சுமார் இருபது வருஷம் உபாத்தியாயினீயாகவும் (Inspectress of schools) ஆகவும் சர்க்கார் வேலையிலிருந்து இப்போது பென்ஷன் பெற்று வருகிறார்கள். நம்முடைய தேசத்துக்கு உழைப்பதில் உத்ஸாஹமுள்ளவர்கள். அவர்கள் மீனாக்ஷி வித்தியாசாலைக்கு உழைப்பதாக ஒப்புக்கொண்டது அந்தப் பள்ளிக்கூடத்தின் அதிருஷ்டமே. அவர்களுடைய விசாரணையின் கீழ் அந்தப் பள்ளிக்கூடம் மேன் மேலும் செழித்து ஓங்கும் என்பதில் சந்தேகமில்லை.

பரோடா மகாராஜா அவர்கள் தன்னுடைய குடிகளின் நன்மையை உத்தேசித்து திரவியச் செலவை சிறிதேனும் கவனிக்காமல் தன்னுடைய ராஜ்ஜியத்தில் பல விதமான சீர்திருத்தங்களை ஏற்பாடு செய்து நடத்தி வருகிறார்கள். ஜனங்களுடைய ஞான அபிவிருத்தியின் பொருட்டு புஸ்தக சாலைகள் ஏற்படுத்தி வருவது அவைகளில் ஒன்று. பரோடா பட்டணத்தில் உள்ள பெரிய புஸ்தகசாலை தவிர ஷை ராஜ்யத்தில் 275 புஸ்தகசாலைகள் ஏற்படுத்தப்படுகின்றனவாம். இது தவிர ஸ்திரமான புஸ்தகசாலை இல்லாத கிராமங்களுக்கு (Travelling libraries) ஏற்பாடுசெய்திருக்கிறார்களாம். அதாவது சுற்றிவரும் புஸ்தகசாலைகள் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு புஸ்தகசாலை மூன்று மாசம் இருக்கும். அதற்குள்ளாக அந்த கிராமவாசிகள் அவைகளை படிக்கவேண்டும். மூன்று மாசமானவுடன் அந்தப்புஸ்தகசாலை வேறுகிராமத்திற்குப் போய்விடும். மற்றொரு கிராமத்திலுள்ள வேறு புஸ்தகசாலை இந்த கிராமத்துக்குவரும். இந்தப்படி பல புஸ்தகசாலைகள் சுற்றிக் கொண்டே வருகின்றன. இவ்விதமாய் கிராமங்களில் வசிக்கும் ஜனங்களுக்குக்கூட ஞானத்தை ஊட்டி வருகிறார்கள். நம்முடைய நாட்டில் அவ்விதமான ஏற்பாடுகள் நடைபெறுவதெக்காலம்?

பரோடா தேசத்துச்சட்ட நிர்மாண சபையில் புதிதாய் ஒரு சட்டம் ஏற்படுத்துவதற்காக ஒரு மசோதா சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதாம். அதாவது புரோஹிதம் வேலை பார்க்கும் ஒவ்வொருவரும் ஷை வேலைக்கு அவசியமான யோக்கியதை தன்னிடம் இருப்பதாக பரீக்ஷை கொடுத்து யோக்கியதா பத்திரம் பெற்றாலொழிய புரோஹிதம் செய்யக்கூடா தென்பது. நமக்கு புரோஹிதம் செய்பவர்கள் பெரும்பாலும் ஸம்ஸ்கிருத பாஷையில் வ்யுத்பத்தியாவது பரிசயமாவது இல்லாதவர்களாயும் மந்திரங்களை அக்ஷரப்பிழையில்லாமலும் ஸ்வரத்துடன் உச்சரிக்கத் தெரியாதவர்களாயுமிருக்கிறார்கள். பூர்வமோ அபரமோ எந்த கிரியையானாலும் அவர்களைக் கொண்டு செய்தால் என்ன பிரயோஜனம்? அந்த மாதிரி சீர்திருத்தம் மிகவும் அவசியம். அப்படிப்பட்ட சட்டம் நம்முடைய ப்ரிடிஷ் ராஜாங்கத்தில் ஏற்படப் போகிறதில்லை. இருந்தாலும் தகுந்த யோக்கியதை இல்லாதவர்களை புரோஹிதர்களாக அங்கீகரிக்காமலும், தகுந்த யோக்கியதையுள்ளவர்களுக்கு விசேஷமான பிரயோஜனம் செய்தும் வருவோமேயானால் அவர்களுக்கே தகுந்த யோக்கியதையை ஸம்பாதித்துக் கொள்ள தூண்டுதல் ஏற்பட்டு நாளடைவில் சீர்திருத்தம் உண்டாகும்.

இங்கிலாந்தில் 1824 வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள Royal Society of Literature என்னும் வித்வத்ஸபை Mrs ஸரோஜினி நாயுடு என்னும் இந்திய ஸ்திரீயை அவர்கள் எழுதிய Golden Threshold, Bird of time என்னும் அருமையான காவியங்களுக்காக ஷை சபையில் ஒரு அங்கத்தினராக ஏற்றுக்கொண்டு கௌரவப்படுத்தி யிருக்கிறார்கள்.

ஐக்கிய மாகாணத்தில் (United Provinces) மசூரி என்னும் பட்டணத்தில் ஒரு இந்திய ஸ்திரீயை முனிசிபல் கமிஷனராக நியமித்திருக்கிறார்கள்.

அமெரிக்காவில் நியூயார்க் என்னும் பட்டணத்தில் உள்ள ஒரு சங்கத்தார் ஆகாச கப்பல் பந்தயம் ஒன்று நடத்தப் போகிறார்கள். பந்தயக்கப்பல்கள் ஸான்பிரான்ஸிஸ்கோ என்னும் பட்டணத்தில் 1915ஷ்த்தில் நடக்கப்போகிற கண்காட்சி கூட்டத்திலிருந்து புறப்பட்டு 90 நாட்களுக்குள் பூமியைச் சுற்றிக் கொண்டு ஷை ஸான்பிரான்ஸிஸ்கோவுக்கு திரும்பி வருகிற முதலாவது கப்பலுக்கு 3 லக்ஷ ரூபாய் பரிசு கொடுப்பதாய் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

தென்கன்னடம் ஜில்லா மங்களூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் (Ganapathy Temple Lower Secondary School) என்னும் பள்ளிக்கூடத்துக்கு கட்டிடச் செலவுக்காக பணம் தேவையாயிருந்ததில் அந்த பட்டணத்திலுள்ள "மஹிளாஸபா" என்னும் ஸ்திரீஸங்கத்துக்குச் சேர்ந்த ஸாரஸ்வத பிராஹ்மண ஸ்திரீகள் ஒவ்வொருவரும் சில விநோத சாமான்கள் செய்து ஒரு கண்காட்சி ஏற்படுத்தி அதைப் பார்ப்பவர்களுக்கு டிக்கட்டு வைத்து அந்த வரும்படியிலிருந்து தேவையான பிள்ளைக்கு எளிதில் சம்பாதித்துக் கொடுத்தார்களாம்.

பிரஹ்மக்ஞானசபைக்கு சேர்ந்தவரும் பம்பாயில் ஸ்ரீகிருஷ்ண லாட்ஜ் என்னும்கிளைச்சபைக்கு பிரஸிடெண்டுமான நரோத்தம்மொரார்ஜிகோகுல்தாஸ் என்னும் பார்ஸீக பிரபு மஹாபலேசுவரத்தில் தனக்கு சொந்தமான விலையுயர்ந்த பங்களாவை ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்துவதற்காகக் கொடுத்தது மல்லாமல் விசேஷமான திரவிய ஸஹாயமும் செய்தாராம்.

பம்பாயிலுள்ள மகமது யூசுப் ஹாஜி இஸ்மால் என்னும் மஹமதிய பிரபு மகமதியர்களுக்கு ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்துவதற்காக 8 லக்ஷம் ரூபாய் கொடுத்தாராம்.

கோயம்புத்தூரில் நாளது ஜுன்மீ 20, 21 தேதிகளில் ஒருமகாசபை கூடப் போகிறது. அதில் மகா-ா-ா-ஸ்ரீ கனம் கேசவபிள்ளை அவர்கள் அக்கிராசநம் வகிக்கிறார்கள். அதேதேதிகளில் அதே இடத்தில் பிரஹ்மக்ஞானசபை கூட்டம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதில் ஸ்ரீமான் ஜீனராஜ தாஸரவர்கள் அக்கிராசநம் வகிப்பார்கள்.

வி. விசுவநாதையர்.